ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மோல தண்ட கிளர்ச்சி

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் காலத்தில் சமயமும் சிங்கள மொழியும் மீண்டும் வளர்ச்சி அடையத் தொடங்கின. சிங்கள மருத்துவ சாஸ்திரம் குறித்த அகராதி ஒன்றும் தயாரிக்கப்பட்டது. இவை அனைத்திற்கும் சரணங்கர தேரரின் முயற்சியே காரணமாக அமைந்தது. கி.பி.1778 இல் சரணங்கர தேரர் மறைந்தார். எனினும், அவர் ஆரம்பித்த அனைத்துக் காரியங்களும் நாளுக்கு நாள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டே சென்றன.

இதேவேளை, நாயக்க வம்சத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவர் இலங்கையில் ஆட்சி செய்வது குறித்தும் அவர்களின் இந்து மத உறவினர்கள் பௌத்த நாடொன்றில் உயரதிகாரிகளாக அதிகாரம் செலுத்துவது குறித்தும் நாட்டின் பிரதானிகள் முரண்பாடடைந்தனர். அவ்வேளை, சீயம் நாட்டின் அரச வம்சத்தைச் சேர்ந்த இளவரசர் ஒருவர் பௌத்த பிக்குவாக இலங்கையில் வாழ்ந்தார். அவரைத் துறவற வாழ்வில் இருந்து மாற்றி இலங்கையின் மன்னனாக முடி சூட்ட சிங்களப் பிரதானிகள் சிலர் சூழ்ச்சிகளை மேற்கொண்டனர். அச் சூழ்ச்சிக்கு மோல தண்ட நிலமே என்பவன் தலைமை தாங்கினான். அவர்களிடையே இருந்த கோபாலன் முதலி என்பவன் இச் சூழ்ச்சியை மன்னனுக்கு வெளிப்படுத்தினான். இதனால், மன்னன் சூழ்ச்சிக்காரர்களைச் சிறைப்பிடித்து கடும் தண்டனை விதித்தான். அவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்கினான். மோல தண்ட நிலமேக்குச் சொந்தமான நிலங்களை நற்குணப் பண்புடையோன் என்ற அடிப்படையில் கோபாலன் முதலிக்கு மன்னன் கையளித்தான். இந்த நிகழ்வு (கெடபேரிய) காவியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்று பௌத்த நாடொன்றின் தலைநகரில் நாத, இந்திரன், விஷ்ணு ஆகிய கடவுள்களின் ஆலயங்கள் இருப்பது குறித்து சீயம் நாட்டுப் பௌத்த பிக்குகள் முகம் சுளித்தனர். அது மாத்திரமல்ல ஆலய சிலைகள் உள்ளிட்ட பொருட்கள் அனைத்தும் அலங்கார பவனியாக நகரில் வலம் வந்து திருவிழாக்களும் கொண்டாடப்பட்டன. இதனை ஸ்ரீ விஜய மன்னனே ஆரம்பித்து வைத்தார். இதனால், ஆலயங்கள் அனைத்தும் மிகுந்த வளர்ச்சி அடைய பௌத்த விகாரைகள் சில பாழடைந்தன.

இது குறித்து நாட்டு மக்கள் மன்னன் மீது குற்றம் சுமத்தினர். அவர்களை மகிழ்ச்சிப்படுத்த கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் தலதாவின் அடையாளங்களையும் பௌத்த இலச்சினைகளையும் இப் பவனியில் சேர்த்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ/தரம் கற்க கணிதத்தில் சித்தி அவசியம்

## ஜனாதிபதி கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தல்



பாடசாலையில் உயர்தர வகுப்பில் எந்தவொரு பிரிவில் கற்க வேண்டி இருந்தாலும், க.பொ.த.சா/தரப் பரீட்சை கணித வினாத்தாளில் குறைந்தது சாதாரண சித்தியை (S) பெற்றிருப்பது அவசியம் என்ற நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என கல்வி அமைச்சுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், க.பொ.த. சா/தரப் பரீட்சையில் கணிதத்தில் சித்தியடையாவிட்டாலும் உயர் தரத்தில் சங்கீதம் மற்றும் விளையாட்டுத் துறைகளில் கற்பவர்களுக்கு கணிதத்தில் விதிவிலக்கு வழங்குவது குறித்து யோசனையொன்றை கல்வி அமைச்சு அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தது. இதனை ஆராய்ந்த அமைச்சரவை, இவ்வாறான தீர்மானத்தின்மூலம் கணிதத்தைக் கற்பதற்கான ஆர்வம் மாணவர்கள் மத்தியில் குறைந்துவிடும் என தெரிவித்துள்ளது. எனவே, தற்போதுள்ள நடைமுறைக்கமைய அதாவது, சா/தரப் பரீட்சையில் முதல் தடவையில் கணிதத்தில் சித்தியடையாதவர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது தடவைகளிலாவது பரீட்சைக்குத் தோற்றி குறைந்தது சாதாரண சித்தியையாவது பெற வேண்டுமென்ற நிபந்தனைக்கமைய, அமைச்சரவைப் பத்திரத்தை மீளத் தயாரிக்குமாறு கல்வி அமைச்சருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மேலும் அறியக்கிடைக்கின்றது.

# ஆசிரியர் விளையாட்டு விழா இம்முறை யாழ்ப்பாணத்தில்



ஒவ்வொரு வருடமும் கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

இந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 19,21 மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விளையாட்டு விழாவில் நாடளாவிய ரீதியிலிருந்து சுமார் 500 இற்கும் அதிகமான ஆசிரிய விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சின் உடற்கல்விப் பணிப்பாளர் நிஹால் பெரேரா தெரிவித்துள்ளார்.

Vijey විජය விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

### உ/தரப் பரீட்சை:

# பழைய பாடத்திட்ட விண்ணப்பக் கால எல்லை 28 வரை நீடிப்பு




எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கு பழைய பாடத்திட்டத்திற்கமையத் தோற்றும் மாணவர்களுக்கான விண்ணப்பக் கால எல்லை இம்மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் பல பிரதேசங்களிலும் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே, மேற்படி பரீட்சை விண்ணப்பத்திற்கான கால எல்லையை நீடிக்கத் தீர்மானித்ததாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இந்த விண்ணப்பக் கால எல்லை இம்மாதம் 15 ஆம் திகதி வரையெனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெரும்பாலான மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணி வழங்கப்படவில்லை

வருடந்தோறும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்ற பாடசாலை இலவச சீருடைத்துணி பெரும்பாலான மாணவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என அறியக்கிடைக்கின்றது. சீருடைத்துணிகள் உரிய முறையில் வழங்கப்படாததால் பெரும்பாலான மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இது குறித்து கைத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவரிடம் கேட்கப்பட்டபோது, நூல் மற்றும் புடவையின் விலை அதிகரிப்பின் காரணமாக, உள்நாட்டு புடவை உற்பத்தியாளர்கள் அதிக விலை கோருவதாகத் தெரிவித்துள்ளார். சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்தே இந்நாட்டு புடவை உற்பத்தியாளர்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படுவதாகவும் கடந்த தினங்களில் மேற்படி நாடுகள் இயற்கை அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்ததனால், குறித்த மூலப்பொருட்களின் விலை அதிகரித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், உள்நாட்டு புடவை உற்பத்தியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான விலைக்கு புடவையைப் பெற்றுக்கொடுக்க முடியாதிருக்கின்றது. இதனால், தற்போது மாற்று வழிமுறைகளைக் கையாளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.அதன்படி, எதிர்வரும் சில வாரங்களுக்குள் தேவையான சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நேர்முகப் பரீட்சை....

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கு மாணவர்களை இணைப்பதற்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களுக்கு தபால் மூலம் பிரத்தியேகமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# பாடசாலை வாகனங்களுக்கு புதிய விதிமுறைகள்

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற சகல 'வேன்'களும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அனுமதியை பெறல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.



குறித்த அதிகாரசபைக்குக் கிடைத்த ஏராளமான புகார்களையடுத்தே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வாகனங்களின் தரம் மற்றும் ஆசனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்படவுள்ளதுடன், மாணவர்களை வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கான பிரத்தியேக அனுமதிப்பத்திரத்தையும் வாகன ஓட்டுனர்கள் பெற்றிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வேன்களில் கறுப்புக் கண்ணாடிகள், ஜன்னலில் திரைச்சீலையோ வேறு மறைப்புக்களோ இருந்தால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. குறித்த எண்ணிக்கைக்கு அதிகமாக மாணவர்களை ஏற்றிச் செல்கின்றனரா என்பதும் கண்காணிக்கப்படும். இந்த விதிமுறைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அகராதிகள் எவ்வாறு உருவாகின?


அகத்திய முனிவர்

**தமிழ் என்ற சொல் குறிப்பாக இரு பொருள்களைக் கொண்டுள்ளது. அவை இனிமை, தனிமை என்பனவாம். ஆதிகாலம் தொட்டு எண்ணற்ற ஏட்டுச் சுவடிகள் தமிழ் மொழியில் இயற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. பின்னர் அவை நூலுருப் பெற்றன.**


ஏட்டுச் சுவடிகள் அன்றைய மக்களுக்கு நல்வழிகாட்டும் நீதி நெறிமுறைகளை எடுத்தியம்பின. அன்றைய அரசர்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் முறையிலும் ஏட்டுச் சுவடிகள் இயற்றப்பட்டன. இலக்கிய-இலக்கண வடிவில் அமைந்திருந்த அவற்றை அன்றைய சாதாரண மக்கள் மட்டுமன்றி ஆட்சியாளர்களாலும் புரிந்துகொள்வது சிரமமாக இருந்தது.

இதன் காரணமாக, முனிவர்களால் 'நிகண்டு' என்ற பெயரில் பிரத்தியேகமாக இயற்றப்பட்ட நூல்கள் தமிழ் மொழிக்குப் பொருள் காட்டும் நூல்களாகக் கொள்ளப்பட்டன. திவாகர, பிங்கல, சூடாமணி போன்ற நிகண்டுகள் அக்காலத்தில் தமிழ் இலக்கிய-இலக்கண ஏடுகளைப் புரிந்துகொள்வதற்காக இயற்றப்பட்டவைகளாகும். திவாகர முனிவரால் இயற்றப்பட்டது 'திவாகரநிகண்டு' ஆகும். பிங்கல முனிவரால் இயற்றப்பட்டது 'பிங்கலநிகண்டு' என்பதாகும். முற்காலத்தில் மக்கள் இலக்கிய இலக்கணங்களைக் கற்பதற்கு முன்னர் நிகண்டுகளை மனப்பாடம் செய்ய வேண்டுமென்ற நியதி இருந்து வந்துள்ளது.

இம்மூன்று நிகண்டுகளின் அடியொட்டித் தோன்றியவையே தமிழ் அகராதிகளாகும். அகரம், ஆதி என்ற சொற்களின் சேர்வு 'அகராதி' ஆகும். 'அ' முதற்கொண்டு தமிழ் அரிச்சுவடி எழுத்துக்களின் முறைக்கேற்ப தமிழ்ச் சொற்களுக்கு சரியான கருத்தைத் தரும் நூற்றொகுப்பு அகராதியாகக் கொள்ளப்படுகின்றது.

அகத்திய முனிவர் தமிழ் மொழியின் முதற்தோற்றப் பாடாகக் கருதப்படுகின்றார். இவர் இமய மலைக்கும் விந்தியமலைக்கும் இடைப்பட்ட ஆரியாவர்த்தம் என்னும் பிரதேசத்தில் வாழ்ந்தவர். அவர் இயற்றிய நூல்களில் அகத்தியமும் முத்தமிழ் இலக்கணமும் அடங்கப்பெற்றதெனக் கூறப்படுகின்றது. வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்றுள்ள அகத்திய முனிவர், வைத்திய சாஸ்திரங்களையும் இயற்றியுள்ளார். அவை இல்லாதொழிந்து போயுள்ளமை மிக வருந்தத்தக்கதே.

எள்ளில்லையெனில் எண்ணெயும் இல்லை என்பதுபோல, இலக்கியம் இல்லையெனில் இலக்கணமுமில்லை என்ற பொருள்பட அகத்திய முனிவர் பாடிச்சென்றுள்ளார். வடமொழியில் வால்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தில் இராம-இராவண யுத்தத்திற்கு முன்னரே அகத்திய முனிவர் தமிழ்நாட்டில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அத்துடன், இராமாயணம் ஆதிகாவியமாகவும் கருதப்பட்டு வருகின்றது. அகத்திய முனிவரிடம் இலக்கணம் கற்ற பன்னிரெண்டு மாணவர்களில் ஒருவரான தொல்காப்பியர் இயற்றியதே தொல்காப்பியமாகும்.




**அகத்திய முனிவர் தமிழ் மொழியின் முதற்தோற்றப்பாடாகக் கருதப்படுகின்றார். இவர் இமய மலைக்கும் விந்தியமலைக்கும் இடைப்பட்ட ஆரியாவர்த்தம் என்னும் பிரதேசத்தில் வாழ்ந்தவர். அவர் இயற்றிய நூல்களில் அகத்தியமும் முத்தமிழ் இலக்கணமும் அடங்கப்பெற்றதெனக் கூறப்படுகின்றது**

அகத்திய முனிவருக்கும் அவர் தம் மாணவர் தொல்காப்பியருக்குமிடையில் நிகழ்ந்த பிணக்கொன்றே அகத்திய முனிவரின் இலக்கண நூல்கள் அழிந்துபோகக் காரணமாக அமைந்ததெனவும் ஊகம் கூறப்படுகின்றது.


வீரமாமுனிவர்

தமிழ்நாட்டில் அகராதிக்கு வழிகோலியவர் வீரமாமுனிவர் ஆவார். அவர் தன் அகராதியை நான்கு வகையாகத் தொகுத்து 'சதுரகராதி' என்று பெயரிட்டுப் பதிப்பித்தார். அதனை அடியொட்டி உருவானதே ஏனைய தமிழ் அகராதிகளாகும். யாழ்ப்பாண அகராதி, கதிரவேற்பிள்ளை தமிழ்மொழியகராதி, தமிழ் சங்க அகராதி, சென்னைப் பல்கலைக்கழக அகராதி என்பன அதன் பின்னர் தொகுக்கப்பட்டவைகளே.

1911 ஆம் ஆண்டு டில்லி மாநகரில் நடைபெற்ற ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவின்போது, கதிரவேற்பிள்ளை என்பவரின் 'தமிழ் அகராதி' வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இது 'காரனேசன் டிக்சனரி' என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டது.

இக்காலப் பகுதியிலேயே இராமநாதன் என்பவராலும் அகராதியொன்று பதிப்பிக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

திவான் பகதூர் பவானந்தம்பிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்ட அகராதியொன்று 1925 இல் வெளியிடப்பட்டுள்ளது. திவான் பகதூர் அவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் உயர் பதவி வகித்தவரும், காவல் துறையின் மிக உயர்ந்த அதிகாரியெனவும் கூறப்படுகின்றது. 1940 இல் கழகத் தமிழ் கையகராதி, என்ற பெயரில் தமிழ் அகராதியொன்றும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.




தமிழ் அகராதிகள் அக்காலத்து இலக்கிய-இலக்கண நூல்களில் வரும் அருஞ்சொற்களைத் தொகுத்தே பதிப்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், தமிழ் அகராதிகளில் தமிழ் வழக்காற்றுச் சொற்களுக்கான பொருள்கள் பெரும்பாலாகக் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2500 ஆண்டுகளாக இலங்கை நாட்டின் வரலாற்றைக் கட்டியெழுப்பியவர்கள் இந்தியாவின் வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் குடிபெயர்ந்தோர் எனக் கூறப்படுகின்றது. தொல்பொருள் ஆய்வுகளும் வரலாற்றுத் தரவுகளும் இதற்குச் சான்று பகிர்கின்றன. அதனால், இலங்கையில் இரு மொழிகளைப் பழக்கத்தில் கொண்டுள்ள மக்கள் உருவாகினர். இந்த இன மக்களினதும் மதவழிபாடுகள், கலாசாரங்கள் இலக்கிய ரசனைகள், சம்பிரதாயங்கள், பண்பாடுகள் அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. அத்துடன், சிங்கள-தமிழ் மொழிகளும் ஒன்றோடொன்று பிணைந்து வந்துள்ளன.

கோட்டைக் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் சிங்கள இலக்கியத்துடன் தமிழ் இலக்கிய ஆதிக்கம் பரவலாக ஏற்பட்டுள்ளமைக்கான சான்றுகள் உள்ளன. ஆங்கிலேயர் ஆங்கில மொழியை அரசமொழியாகவும், கல்விமொழியாகவும் உயர்த்தினார்கள். இதனால், ஒன்றரை நூற்றாண்டுகளாக சிங்களம்- தமிழ் மொழிகளின் வளர்ச்சியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. சுதந்திரத்தின் பின்னரே, சுதேச மொழிகள் இரண்டினதும் வளர்ச்சி மேம்பாடடையத் தொடங்கியதெனலாம்.

இலங்கையில் கல்வி, தொழில்துறைகளின் மேம்பாட்டிற்காக சிங்கள-தமிழ் அகராதியொன்று அரச கரும மொழித் திணைக்களத்தாலும், தமிழ், சிங்கள அகராதியொன்று 'சீடா' நிறுவனத்தின் அனுசரணையுடனும் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை நாடானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கல்வி, அரசகருமம், தொழில்துறை ஆகிய சகலவற்றிலும் பயன்படுத்தி வருவதனால், மும்மொழிகளினதும் அகராதியின் தேவை உணரப்பட்டது. இதனால், பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திருமதி டப்ளிவ்.ஜே.பெர்னாண்டோவினால் 1992 ஆம் ஆண்டில் சிறிய மும்மொழி அகராதியொன்று, பொது அறிவு மஞ்சரியுடன் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் காலங்கள் மும்மொழி அகராதியின் தேவையில் தொக்கி நிற்கின்றன.

ஐ.ஏ.ஸத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிற்கு மாபெரும் அருட்கொடை: முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்

'லா இலாஹஇல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்- வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார்' இதுவே இஸ்லாத்தின் அத்திவாரம். அந்தவகையில், அல்லாஹு¬த்தஆலாவினால் உலகிற்கு அனுப்பப்பட்ட மாபெரும் அருட்கொடையாகவே இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் திகழ்கின்றார்கள். உலக மக்கள் யாவருக்குமான சிறந்த முன்மாதிரிகளை அல்லாஹு¬த்தஆலா அவரிடம் ஏற்படுத்தியிருந்தான். இதற்காக, புனித அல்குர்ஆனை அவருக்கு அருட்கொடையாக வழங்கி, உலக வாழ்க்கைக்கான சிறந்த வழிகாட்டலைச் செய்வதற்கு வழியமைத்தான். இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

"நபியே! நீர் கூறுவீராக! மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்குரியது. அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆகவே, அல்லாஹ்வின் மீதும் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய அவன் தூதர் மீதும் ஈமான் கொள்ளுங்கள். அவரும் அல்லாஹ்வின் மீதும் அவன் வசனங்களின் மீதும் ஈமான் கொள்கிறார். அவரையே பின்பற்றுங்கள். நீங்கள் நேர்வழி பெறுவீர்கள்". அல்குர்ஆன் (7:159)

உண்மையிலேயே, வார்த்தைகளால் வர்ணித்துக் கூற முடியாதளவுக்கு அழகிய பண்புகளையும் சிறந்த முன்மாதிரிகளையும் கொண்டவர்களாகவே இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் விளங்கினார்கள். ஆக, இத்தினத்தில் அன்னாரின் வாழ்க்கை வரலாறு பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

**இக்கட்டுரை திருத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை நினைவுகூருமுகமாக பிரசுரமாகின்றது**

## வாழ்க்கை

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கி.பி.571 ஆம் ஆண்டு இஸ்லாமிய வருடக்கணக்கின்படி ரபியுல் அவ்வல் மாதம் பிறை 12 இல் மக்கா நகரில் பிறந்தார். இவர் பிறக்கும்போதே, தகப்பனார் அப்துல்லாஹ்வை இழந்திருந்தார். தனது ஆறாவது வயதில் தாயாரான ஆமினாவும் உயிரிழந்தார். இதன்பின்னர்,அவரது பாட்டனாரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். நபி (ஸல்) அவர்களுக்கு எட்டு வயதாகும்போது பாட்டனாரும் மரணமடைந்தார். இதனை அடுத்து, தனது பெரிய தந்தை அபூதாலிப்பின் பொறுப்பில் வளர்ந்து வந்தார். தனது இருபதாவது வயதில் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் வணிகத்தில் ஈடுபட்டார். இக்காலகட்டத்தில் அப்பகுதியில் வணிகத்தில் சிறப்பும் வளமும் பெற்று விளங்கிய கதீஜா அம்மையாரின் வியாபார நடவடிக்கைகளிலும் பங்கேற்றார். இதன்போது நபி (ஸல்) அவர்களின் நேர்மை, உண்மை, நம்பகத்தன்மை போன்ற நற்பண்புகளைக் கண்ட கதீஜா அம்மையார், நபியவர்களின் சம்மதத்துடன் அவருடன் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார். இவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் நான்கு பெண் பிள்ளைகளும் இருந்தன. அவர்களில் இரண்டு ஆண்பிள்ளைகள் சிறு வயதிலேயே மரணித்துவிட்டன.

## நபிப்பட்டம்

நபி (ஸல்) அவர்கள் நாற்பது வயதை அடையும்போது, அவர்கள் அடிக்கடி 'ஹிரா' குகைக்குச் சென்று தனித்திருந்து வணக்கவழிபாடுகளிலும் பிரபஞ்சம் பற்றிய ஆழ்ந்த சிந்தனைகளிலும் ஈடுபடுவார்கள். இந்நிலையில், ஒரு நாள் ஹிரா குகையில் தனிமையில் இருந்தபோது, அல்லாஹ்வின் ஆணைப்படி, 'நுபுவ்வத்' எனும் நபிப்பட்டத்தை வழங்கும்பொருட்டு, ரமழான் மாதத்தின் ஒரு நாளில் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் புனித அல்குர்ஆனின் வசனங்களுடன் நபியவர்களிடம் வந்தார். அன்றிலிருந்து தொடர்ந்து 23 வருடங்களாக நபி (ஸல்) அவர்களுக்கு வானவர் ஜிப்ரீல் (அலை) மூலம் அல்லாஹு¬த்தஆலாவிடமிருந்து அல்குர்ஆன் வசனங்கள் சந்தர்ப்பங்களுக்கேற்ப இறக்கப்பட்டன.

நபிப்பட்டம் வழங்கப்பட்டதன் பின்னர், நபியவர்கள் இஸ்லாத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டார்கள். இதன்போது, இவர்களுக்கு பல்வேறுபட்ட எதிர்ப்புக்கள், சோதனைகள் எழுந்தன. ஆனாலும், அல்லாஹ்வின் அழைப்பை நிறைவேற்றுவதற்காக அவனிடமே பிரார்த்தித்தவர்களாய் இஸ்லாத்திற்கான அழைப்புப் பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டார். இதனால், இறுதியில் மக்காவை விட்டு மதீனாவுக்கு வெளியேறவேண்டி ஏற்பட்டது. இதுவே 'ஹிஜ்ரா' எனப்படுகின்றது (இந்தப் பயணத்தை அடுத்தே ஹிஜ்ரி ஆண்டு கணிக்கப்படுகின்றது). இது நபியவர்களின் 53 ஆவது வயதில் நிகழ்ந்தது. அங்கும் நபியவர்களுக்கு பல்வேறு சோதனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டபோதிலும், பிற்காலத்தில் அகிலத்தாருக்கு கிடைத்த பொக்கிஷமாக போற்றப்படக்கூடியளவுக்கும் அனைவராலும் நேசிக்கப்படக்கூடியளவுக்கும் அவருக்கு வெற்றிகள் கிட்டின.

## இறுதிக்காலம்

இஸ்லாத்தின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, இவ்வுலகில் தாம் இன்னும் சொற்ப காலமே வாழப்போவதாக நபியவர்களின் மனதில் தோன்றியது. இதற்கிடையில், அல்லாஹு¬த்தஆலாவின் விருப்பத்திற்கேற்ப, நபியவர்கள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமானார்கள். ஹஜ்ஜு¬டைய கடமைகளை நிறைவேற்றியவர்களாக, அரஃபா மைதானத்தில் கூடியிருந்தவர்களுக்காக நபியவர்கள் 'ஹஜ்ஜதுல் விதா' எனும் இறுதி உரையை நிகழ்த்தினார்கள். அந்த உரையில் மக்களுக்கு ஏராளமான நல்லுபதேசங்களை வழங்கினார்கள். அதன்போது, "நான் உங்களிடம் விட்டுச் செல்வதை நீங்கள் உறுதியாகப் பின்பற்றினால் ஒருபோதும் வழி தவறமாட்டீர்கள். அதுதான் அல்குர்ஆனும் ஹதீஸு¬ம் (நபியவர்களின் சொல், செயல், அங்கீகாரம்) ஆகும்" என நபியவர்கள் தெரிவித்தார்கள். இதன்பின்னர் சிலகாலம் உயிர்வாழ்ந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், ஹிஜ்ரி 11 ரபியுல் அவ்வல் பிறை 12, தனது 63 ஆவது வயதில் மதீனாவில்மரணமடைந்தார்கள்.





## பிரபல்யங்களின் கருத்துக்கள்

உயரிய குணங்களாலும் அழகிய முன்மாதிரிகளாலும் நிரம்பியிருந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்களை இவ்வுலகில் நேசிக்காதவர்கள் எவருமில்லை. உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்ற சிலர் அவர் பற்றிக்கூறிய கருத்துக்கள் இதற்கு சிறந்த் எடுத்துக்காட்டாகும். அவற்றுள் சில வருமாறு:

* "தத்துவ போதகர், சொற்பொழிவாளர், இறைத்தூதர், சட்டநிபுணர், மாபெரும் போர் வீரர், கருத்துக்களை வென்ற வரலாற்று வீரர், பகுத்தறிவுபூர்வமான கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகளை நிலைநாட்டியவர், மாயைகள் இல்லாத பகுத்தறிவு ரீதியில் ஒரு கொள்கை வழி நாகரிகத்தை உருவாக்கியளித்த மாமேதைதான் முஹம்மத் (ஸல்) அவர்கள்". - LAMARTINE> HISTOIRE DE LA TURQUIE.

* "உலகின் மிகச் செல்வாக்கு வாய்ந்த மனிதர்களின் பட்டியலில் முதலிடம் வகிப்பவராக முஹம்மத் (ஸல்) அவர்களையே நான் தேர்ந்தெடுத்தேன். ஏனெனில், முஹம்மத் (ஸல்) அவர்கள்தான் உலக வரலாற்றிலேயே சமயத்துறை, உலகியற்துறை இரண்டிலும் மிகவும் வெற்றிகரமானவராகத் திகழ்ந்த மாமனிதர் ஆவார்". - MICHEL H.HART> THE 100: A RANKING OF MOST INFLUENTIAL PERSONS IN HISTORY.


எனவே, நாம் மனித வாழ்க்கைக்கென அல்லாஹு¬த்தஆலாவினால் இறக்கப்பட்ட அல்குர்ஆன் எடுத்துக்கூறும் வழிமுறைக்கமைய, இறைதூதர் முஹம்மத் நபியவர்களின் வழி நடந்து, அல்லாஹ்வின் அருளையும் கருணையையும் பெற்றவர்களாவோம்!

-ஜீநு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் இ








**எமது நாட்டில் சுற்றுலாத்துறை ஆரம்பமான கால கட்டத்தில் இருந்தே, நம்நாட்டிற்கு உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுத்த பிரதான இடங்களாக, பிரகாசமான சூரியஒளியுடனும் இயற்கை அழகுடனும் கூடிய அழகிய கடற்கரைகள் அமைகின்றன. 1930 ஆம் ஆண்டுகளில் இருந்தே ஐரோப்பிய உல்லாசப் பயணிகளுக்கு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தாம் விரும்பும் முதல்தர நாடாகவும் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகிய இடமாகவும் இலங்கையே திகழ்கின்றது. தற்காலத்திலும் கூட நமது நாடு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் மத்தியில் கரையோர உல்லாசப் பயணங்களால் புகழ்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.**

இலங்கையைச் சூழ இருப்பது ஆழமற்ற இரம்மியமான கடற்கரைகளாகும். இங்கு அழகிய சூரிய அஸ்தமனத்தைக் கண்டுகளிக்க உல்லாசப் பயணிகள் வருவது புதிய விடயமல்ல. அவர்கள் இதற்காக நீர்கொழும்பு, கல்கிசை, பேருவளை, ஹிக்கடுவ மற்றும் உனவட்டுன போன்ற தென்மேல் கரையோரங் களையே நாடி வருகின்றனர். இலங்கையின் உல்லாசப் பயணத்துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்ட காலங்களில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிகமாக, நாட்டின் கிழக்குக்கரையோரப் பிரதேசங்களுக்கே சென்றனர். அந்த வகையில் நிலாவெளி, பாசிக்குடா, அறுகம்பை ஆகிய கரையோரப் பகுதிகள் உல்லாசப்பயணத்துறையில் மிக முக்கிய இடத்தை வகித்தன.



கடல் அலைகளில் சறுக்கி விளையாடுதல்



## அருகம்பே (அறுகம்குடா)

இலங்கையைச் சுற்றியுள்ள கரையோரப் பிரதேசங்களில் அறுகம்பே கடற்கரைக்கு தனி மகத்துவம் உண்டு. நீச்சல், பாய்மரப்படகு, படகுச்சவாரி, கடல் அலைமீது சறுக்கல் போன்ற சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்பும் சாகச நீர் விளையாட்டுகளுக்கு மிக உகந்த இடமாகவும் அவர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்த இடமாகவும் இப்பகுதி திகழ்கின்றது. இப்பகுதியானது கடலலை மீது சறுக்கி விளையாடுவதற்கு மிகவும் பொருத்தமான மற்றும் உலகில் முன்னணி இடங்களில் பத்தாவது இடத்தை பெற்றிருக்கின்றது.

பொதுவாக, ஏப்ரல் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை இத்தகைய நீர் விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்காக பிரித்தானியா உட்பட ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். அறுகம்குடாவில் மேற்குறிப்பிட்ட காலகட்டத்தில் நீரின் சராசரி வெப்பம் $28^0$ செல்சியஸாகவும், காற்றின் சராசரி வெப்பம் $32^0$ செல்சியஸாகவும் காணப்படும். இந்த நிலைமை உல்லாசப் பயணிகளின் நீச்சல் சாகச விளையாட்டுகளுக்கு மிகப் பொருத்தமான சூழலாகும்.

அருகம்பேக்கு அருகில் உள்ள பிரதேசத்தில் புகழ்வாய்ந்த சுற்றுலாத் தலங்கள் பல அமைந்துள்ளன. குமுன மற்றும் லாஹுகல ஆகிய தேசிய விலங்குகள் புகலிடம் இவற்றில் முக்கியமானவை.

## புறாத்தீவு 'புறாமலை'

திருகோணமலை நிலாவெளியில் அமைந்துள்ள 'புறாமலை' என அழைக்கப்படும் புறாத்தீவு உல்லாசப் பயணிகளை பெரிதும் கவர்ந்த இடமாகும். பெருந்தொகையான புறாக்கள் தமது அடைக்கலப் பிரதேசமாக இங்கு வாழ்வதால் இது 'புறாத்தீவு' என பெயர் பெற்றதாக கருதப்படுகின்றது. இது வெறுமனே தீவாக மாத்திரமல்லாமல் சற்று உயரமான ஒரு குன்றைப் போல் காட்சியளிப்பதால் இதனை 'புறாமலை' என்றும் அழைக்கின்றனர். 'புறாத்தீவு' 1974 ஆம் ஆண்டே ஒரு சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இங்கு வாழும் உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இதனை சரணாலயமாக்கினர். பின்னர் இப்புறாத் தீவையும் அதனை அண்டிய பகுதிகளையும் பௌதிக மற்றும் உயிரின பல்வகைமையின் இருப்பைக் கருத்தில்கொண்டு 2003 ஆம் ஆண்டு தேசிய வனப்பூங்காவாக அங்கீகரித்தனர்.

திருகோணமலையின் நிலாவெளி கடற்கரைக்கு அருகில் கடல் மட்டத்தில் இருந்து 15 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள புறாத்தீவானது தேசிய வனப்பூங்காவுக்குச் சொந்தமான தீவுகளில் ஓரளவு பெரியதும் மற்றும் சிறியதுமான தீவுகளாகும். நிலாவெளிக் கரையில் இருந்து பார்க்கும்பொழுது தூரத்தில் ஒரே ஒரு தீவு இருப்பதுபோலவே இது காட்சியளிக் கும். அத்துடன், இத்தீவு உயர் கற்பாறைகள் மற்றும் முருகை கற்பாறைகளால் சூழப்பட் டுள்ளது. அதற்கருகில் ஆழமற்ற கடலில் தெளிவான நீரில் காணப்படும் பளிங்குக் கற்பாறைகள் பார்ப்போர் கண்களுக்கு பெரும் குளிர்ச்சியாகவும் ரம்யமாகவும் காணப்படுகின்றன.

உலகின் அவதானத்தை ஈர்த்த தோல் ஆமை, மற்றும் கல்-ஆமை உள்ளிட்ட சில ஆமை இனங்கள் வருடத்தில் குறிப்பிட்ட காலகட்டத்தில் முட்டையிடுவதற்காக, புறாத் தீவிற்கும் அதனை அண்டிய கடற்கரைகளுக்கும் வருகின்றன. புறாத்தீவுக்கு அண்மை யில் உள்ள முருகைக் கற்பாறைப் பிரதேசத்தில் அலங்கார மீன் இனங்கள் பல வாழ்கின் றன. நிலாவெளி கடற்கரைப் பிரதேசம் 1970 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தே உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மனதை கவர்ந்ததொரு சுற்றுலாத் தலமா கத் திகழ்கின்றது. அதனால், இங்கு வரும் உல்லாசப் பயணிகள் நிலாவெளியுடன் நின்றுவிடாது புறாத்தீவிற்கும் சென்றே வருகின்றனர்.



புறாமலை

## யாழ்ப்பாணம்

இலங்கையின் வட பகுதியில் அமைந் துள்ள மிகத் தொன்மையான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட நகரம் தான் யாழ்ப்பாணமாகும். இலங்கையின் பிரபல மான புராதன துறைமுகமாக முன்னர் கருதப்பட்ட ஜம்புகோளப்பட்டண துறைமுகமானது காங்கேசன்துறைக்கு மிக அண்மையில் உள்ள செம்பியன்துறையில் அமைந்திருந்தது.

யாழ் குடாநாடு பல தீவுகளைக் கொண் டது. அதில் பரப்பளவில் மிகப்பெரிய தீவு 'கைட்ஸ்' என ஆங்கிலத்தில் அழைக்கப்ப டும், ஊர்காவற்றுறையாகும். இது 64.3 சதுர கி.மீற்றர் பரப்பளவைக்கொண்டது. கடற்கரையோரம் உயர்ந்த பனை மரங் களால் நிறைந்த 'டெல்ப்' தீவு என் ஆங்கி லத்தில் அழைக்கப்படும் நெடுந்தீவு மற்றொரு முக்கிய தீவாகும். அத்துடன் நைனாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் மற்றும் நாக விகாரை என்பவை காரணமாக நைனாதீவு மிகப் பிரபலம் வாய்ந்த தீவாக விளங்குகின்றது. காரைதீவு, இரணைதீவு, எலுவை தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகியன யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயம் கவர்ந்த கரையோரம்



## காலி

காலி மாவட்டத்திலும் சுற்றுலாப் பயணிகளின் மனம் கவரும் பல இடங்கள் உள்ளன. அவற்றில் காலிக் கோட்டை முக்கிய இடத்தைப் பெறுகிறது. சுற்றுலாப் பயணிகள் பெருமளவு பார்வையிடும் உணவட்டுன பிரதேசமும் காலி மாவட்டத்திலேயே அமைந்துள்ளது.

உணவட்டுன கடற்கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அதற்கருகில் இருக்கும் கடற்பரப்பில் நீரில் மூழ்கி மகிழ்வதற்கு Scuba எனப்படும் நீருக்கடியில் சுவாசிப்பதற்கு பயன்படுத்தப்படும் இயந்திர உடைகளைப் பயன்படுத்துகின்றனர். அத்தோடு, நீரின் மேல் சறுக்கல் விளையாட்டுக்களில் ஈடுபடும் வசதிகளும் உண்டு. 'ருமஸ்ஸல' மலையும் இதற்கருகிலேயே அமைந்துள்ளது.



மிகப் புகழும் பழமையும் மிக்க சைவ சந்நிதானங்களாகும். ஈஸ்வர கோயில்களில் நகுலேஸ்வர ஆலயம் மிகவும் புகழ் வாய்ந்ததாகும். இத்திருத்தலம் யாழ் நகரிலிருந்து 12 மைல் தூரத்தில் உள்ள கீரிமலை எனும் புண்ணிய பூமியில் அமைந்துள்ளது. கடலுக்கு மிக அருகில் அமைந்துள்ள அந்த ஆலயம் நோய் தீர்க்கும் சக்தியுள்ள நன்னீரைக் கொண்ட அழகிய கேணியையும் கொண்டுள்ளது. அத்துடன், கீரிமலை இந்துக்களின் புனித தலமாகவும் கருதப்படுகின்றது. மேலும் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் பெற்றதொரு இடமுமாகும். இலங்கையில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள ஒல்லாந்த கோட்டைகளில் யாழ் நகரில் அமைந்துள்ள ஹெமன் ஹீல் (Hammen Hiel) கோட்டை மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.இக் கோட்டையை முதன் முதலாக போர்த்துக்கேயரே கட்டினர். பின்னர் ஒல்லாந்தர் அதனைக் கைப்பற்றினர்.

குடாநாட்டிற்கு அண்மையில் அமைந்துள்ள முக்கிய அழகிய தீவுகள[illegible]ம்.

நல்[illegible] கந்தசாமி கோவில் யாழ்ப்பாண குடாநாட்டில் அமைந்துள்ள மிக முக்கியமானதும் புகழ்வாய்ந்ததுமான சைவப் பேராலயமாகத் திகழ்கின்றது. நல்லூர் ஆலயத்திற்கு அருகாமையில் கைலாசநாத பிள்ளையார் கோயில், சட்டநாதர் கோயில், வீர மஹா காளி அம்மன் ஆலயம் போன்ற ஆலயங்கள் அமைந்துள்ளன. தொண்டமானாறு ஆலயம் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயம் என்பனவும் யாழ் குடாவில்



நல்லூர் கந்தசாமி கோயில்

## மாத்தறை

ஆதிகாலத்தில் இலங்கையின் முதல் கோத்திர மக்கள் கூட்டத்தினராக நாக கோத்திரத்தாரே மாத்தறையில் வாழ்ந்த தாகக் கருதப்படுகின்றது. அநுராதபுர யுகத்தில் மாத்தறைப் பிரதேசம் ருகுணுரட்டைக்குச் சொந்தமாக இருந் தது. மூத்தசிவன் மன்னனின் மகனா கிய மகாநாக இளவரசனே இப்பிரதே சத்தின் முதல் ஆட்சியாளனாவான். இம்மாவட்டத்தில் வரலாற்றுப் புகழ் மிக்க தொல்பொருள் ஆய்வுக்கு அவசியமான பெறுமதிமிக்க



மாத்தறை நட்சத்திரக் கோட்டை

சான்றுகளைக் கொண்ட வெஹர விகாரை அமைந்துள்ளது. அத்துடன், மாத்தறைப் பிரதேசமானது அழகிய கடற்கரையுடன் கூடிய உல்லாசப்பயணிகளைப் பெரிதும் கவர்ந்த ஒரு பிரதேசமாகும்.

## ஹிக்கடுவ தேசிய வனப்பூங்கா

இலங்கையில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களில் ஹிக்கடுவ தேசிய வனப் பூங்கா மிகவும் புகழ்வாய்ந்தது. ஹிக்கடு வைக்கு வருகை தரும் உல்லாசப் பயணி கள் சுத்தமான மணல்பரப்புள்ள கடற்கரை ஆழமற்ற தெளிவான நீர், முருகைக் கற்பாறை, சமுத்திர உயிரின பல்வகைமை என்பனவற்றைக்கண்டு மகிழ்கின்றனர். ஹிக்கடுவைக்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அடியில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகின் மூலம் (Glass Bottom Boat) ஆழமற்ற கடலில் பளிங்குப் பாறைகளை யும் அழகிய கடலடித்தாவரங்கள், பல வர்ண மீன்கள் உள்ளிட்ட பல உயிரினங் களையும் பார்வையிடுகின்றனர்.

ஹிக்கடுவ பளிங்குப் பாறைகள் Foliaceous வகையைச் சேர்ந்த Montipora வகுப்பைச் சேர்ந்தவையா கும். இந்த பளிங்குப் பாறைகள் 'பொலிப் சம்' (polypsm) எனும் சின்னஞ்சிறு உயிரி னத்தாலேயே உருவாகின்றது.இந்த 'பொலிப்சம்' தனியாகவும் கூட்டமாகவும் வாழும் இயல்புடையது. விரல் பளிங்கு புதருடன் கூடிய பளிங்கு, ரோஸ் பளிங்கு, டியூப் பளிங்கு, கடல் சுவான் போன்ற பல்வேறு பளிங்கு வகைகளை இப்பிரதேசத்தில் காணலாம்.

## மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய பிரதேசங்கள், முற்காலத்தில் 'கோகண்ண' என அழைக்கப்பட்டது. இவற்றில் திருகோணமலை முதல் தெற்கே பாணம்பற்று வரை உள்ள பிரதேசங்களைக் குறிப்பிடலாம். முன்னர் 'தீகவாபி' எனவும் அழைக்கப்பட்ட இப்பிரதேசம் 1833 இல் மாகாணங்கள் பிரிக்கப்படும்போது மட்டக்களப்பு மாவட்டம் எனப் பிரிக்கப்பட்டது.

மட்டக்களப்பிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் பல்வேறு மதங்களைச் சேர்ந்த புனிதத் தலங்கள் மற்றும் தொல்பொருள் சான்றுககளைத் தாராளமாக இங்கு காணலாம். இவை தவிர மட்டக்களப்பில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டையை யும் காணலாம்.




## கற்பிட்டி

புத்தளம் மாவட்டத்திலுள்ள கற்பிட்டி கடற்கரை உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கவர்ந்த பிரதேசமாகும். கி.பி.1644 இல் கற்பிட்டி ஒல்லாந்தர் வசமானது. ஏற்கனவே போர்த் துக்கேயரால் உருவாக்கப்பட் டிருந்த இத்துறைமுக நகரம் பின்னர் ஒல்லாந்தர் வசமானது. அவர்களின் கட்டடக் கலைச் சம்பிரதாயங்களுக் கேற்ப இந்த நகரம் நிர்மாணிக் கப்பட்டது. அவர்கள் இந்நக ரைப் பாதுகாக்க 1606 இல் கோட்டை ஒன்றையும் கட்டினர். அதே காலகட்டத் தில் அவர்கள் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றையும் கட்டினர். கற்பிட்டிக் கடற்கரையில் அமைந்துள்ள உயர்நிலமான 'குதிரைமலை' பிரதே சம் வரலாற்றுப் புகழ்வாய்ந்ததொரு இடமாகும். புராதன கடல் மார்க்க நாடு காண் பயணங்களுக்கு குதிரைமலை மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கருதப்பட்டது. குதிரைமலை அடிவா ரத்திலிருந்தும் அதனைச் சூழவுள்ள இடங்களிலிருந்தும் பெருமளவு தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. கற்பிட் டிக்கு அருகிலுள்ள தலவில்லு புனித அன்னம்மாள் ஆலயம் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்த ஓர் புனிதத் தலமாகும். ரோமன் கத்தோ லிக்க பக்தர்களின் புனிதத் தலமான இந்த ஆலயம் போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்டது.

**கற்பிட்டி கடற்கரையை அண்டிய பகுதியில் உலாவும் டொல்பின் மீன்கள்**





இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தலைநகரின் தோற்றம்
அரச மற்றும் நிர்வாகத் தலைநகரின் தோற்றம்

வாரம் ஒரு நாடு

# சுவாஸிலாந்து


எம்லெம்பே உயர் சிகரம்

**அரசு:** இரு சட்ட சபைகளைக்கொண்ட முடியரசு.
**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து, 6 செப்டெம்பர் 1968.
**தேசிய பெயர்:** உம்புஸோ வி ஸ்வாடினி (சுவாஸிலாந்து ராச்சியம்-Kingdom of Swaziland)
**ஆட்சியாளர்** (1986): மன்னர் மூன்றாம் ஸ்வாதி.
**பிரதமர்** (1996): பர்ணபாஸ் சிபுசிசோ டிலாமினி.

## புவியியல்

சுவாஸிலாந்து, ஆபிரிக்காக் கண்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இதனைச் சூழ தென் ஆபிரிக்காவும் மொசெம்பிக்கும் அமைந்துள்ளன. நாட்டின் பெரும்பகுதி உயர் மலைகளைக் கொண்டு காணப்படுகின்றன. நாட்டை ஊடறுத்துப் பல நதிகள் பாய்கின்றன. அவற்றில் மகா உசுடு நதி பிரசித்தி பெற்றது. நாட்டின் மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் சரிந்து செல்லும் சமவெளிகள் காணப்படுகின்றன.

**மொத்தப் பரப்பு:** 6,704 ச.மைல் (17,363 ச.கி.மீற்றர்);
**நிலப்பரப்பு:** 6,641 ச.மைல் (17,200 ச.கி.மீற்றர்).
**நிலப்பிரிவுகள்:** 4 மாவட்டங்கள்.
**தலைநகரம்** (2003): பாபேன்.
**அரச மற்றும் நிர்வாகத் தலைநகரம்:** லொபம்பா.
**பெரிய நகரம்:** மன்ஸினி.
**உயர் மலைச்சிகரம்:** எம்லெம்பே (1,362 மீ);
**தாழ்மையம்:** மகா உசுடு நதி.
**மக்கள் தொகை:** 1,354,051.
**நாணயம்:** லிலாங்கனி.
**மொழிகள்:** ஆங்கிலம், ஸ்வாசி (இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகள்).
**தேசிய கீதம்**
Nkulunkulu Mnikati wetibusiso
temaSwati;
Siyatibonga tonkhe tinhlanhla;
Sibonga iNgwenyama yetfu.
Live netintsaba nemifula....என
ஆரம்பமாகின்றது..


மன்னர்

**இனக்குழுவினர்கள்:** ஆபிரிக்கர் 97%, ஐரோப்பியர் 3%.
**சமயங்கள்:** ஸீயோனிஸ்ட் 40%, ரோமன் கத்தோலிக்கம் 20%, இஸ்லாம் 10%; பஹாய், அங்கிலிக்கன், மெதொடிஸ்ட், மோர்மொன், யூத மற்றும் ஏனைய சமயங்கள் 30%.
**எழுத்தறிவு** (2003): 82%.
**இணையத்தளக் குறியீடு:** .sz
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 268

## வரலாறு

பண்டு மக்கள் தென்மேற்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து 16 ஆம் நூற்றாண்டில் இங்குவந்து குடியேறினர். 18 ஆம் நூற்றாண்டில் வேறொரு சாதியினர் பெரும் சமூகமாக குடியேறினர். இவ்வாறு இடம்பெயர்ந்து குடியேறியவர்கள் 19 ஆம் நூற்றாண்டில் ஸுலு இனத்தவர்களுடன் மோதல்களில் ஈடுபட்டனர். 1894 முதல் 1899 வரை தென்னாபிரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. எனினும், 'போயர்' யுத்தத்தின் பின், 1902 இல் பிரித்தானிய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. 1963 இல் இந்த நிலப்பகுதிக்குத் தனித்துவமான அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. 6 செப்டெம்பர் 1968 இல் ஒரு சுதந்திர நாடாக சுவாஸிலாந்து அங்கீகரிக்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் ஸ்வாதி மன்னரின் ஆட்சி நிலவுகின்றது.



தேசிய இலச்சினை







அரசியல் கட்சிகள் அனைத்தும் தடைசெய்யப் பட்டுள்ளன. 65 பேரைக்கொண்ட நாடாளுமன்றத்தில் 10 பேரை மன்னர் நியமித்துள்ளார்.

## கலாசாரம்

சுவாஸிலாந்து கலாசாரத்தில் 'இங்க்வாலா வைபவம்' முக்கிய இடத்தை வகிக்கின்றது. நீண்ட நாளென அழைக்கப்படும் டிசம்பர் 31 ஆம் திகதியில் இவ்விழா கொண்டாடப்படுகின்றது. 'முதற் கனிகளின் வைபவம்' என்பதே இங்க்வாலா என்பதன் அர்த்தமாகும். மன்னர் மக்களின் முதலாவது அறுவடையை சுவைப்பது இந்நிகழ்வின் முக்கிய அம்சமாகும். சகல சுவாஸிகளும் இங்க்வாலா நிகழ்வில் கலந்துகொள்வர்.


நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி

## காலநிலை

பிரகாசமான சூரியஒளியைக்கொண்ட பகல் பொழுதினை இங்கு பொதுவாகக் காணலாம். செப்டெம்பர் முதல் ஒக்டோபர் வரை வசந்தகாலமாகும். நொவெம்பர்-மார்ச் வரை கோடைகாலமாகும். ஏப்ரல்-மே வரை இலையுதிர் காலமாகும். ஜூன்-ஒகஸ்ட் வரை மாரிகாலமாகும். கோடைகாலத்திலேயே மழைவீழ்ச்சியும் காணப்படுகின்றது. மாரிகாலம் உலர் பருவமாகும்.


## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2001): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 38,500; செல்லிடத் தொலைபேசிகள் 45,000. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001): AM 3, FM 2, SW 3. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 5. **இணையத்தள வழங்குனர்கள்** (2002): 5; இணையத்தளப் பாவனையாளர்கள்: 7,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2002): மொத்தம் 301 கி.மீ.
**பெருந்தெருக்கள்:** மொத்தம் 3,247 கி.மீ.
**விமான நிலையங்கள்** (2002): 18.

## பொருளாதாரம்


பிரதமர்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 10%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கரும்பு, பருத்தி, சோளம், அரிசி, அன்னாசி, பாற்பண்ணை, ஆடுகள், செம்மறிகள். **தொழிலாளர் தொகை** (2003): 155,700. **வேலையற்றோர்:** 40%. **கைத்தொழில்கள்:** கனிமம் (நிலக்கரி, சுத்தம் செய்யப்படாத கல்நார்), சீனி, புடவை. **இயற்கை வளங்கள்:** கல்நார், நிலக்கரி, களி, நீர்மின்வலு, காடுகள், **ஏற்றுமதிகள்** (2009): மென்பானங்கள், சீனி, பருத்தி நூல். **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்கள், போக்குவரத்து சாதனங்கள், உணவுப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): தென் ஆபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், மொசெம்பிக், ஜப்பான், சிங்கப்பூர்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

* மவுலா இயற்கையகம் * மில்வானே வனவிலங்கியல் சரணாலயம் * எசுல்வினி பள்ளத்தாக்கு * லொபம்பா தேசிய நூதனசாலை * சுவாஸி தேசிய நூதனசாலை * பொஃபன்யேன் நீர்வீழ்ச்சி.


மவுலா இயற்கையகம்
பொஃபன்யேன் நீர்வீழ்ச்சி
மகா உசுடு நதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தபால் வரலாறு கூறும் அரும் பொருட்காட்சியகம்

**தேசிய அரும் பொருட் காட்சியகத்துடன் இணைந்தும், இணையாமலும் பல அரும்பொருட் காட்சியகங்கள் நம் நாட்டில் உள்ளன. அண்மையில் அவற்றில் தேசிய தபால் அரும்பொருட் காட்சியகமும் இணைந்து கொண்டது. இலங்கையின் தபால் தந்தி சேவையின் வளர்ச்சியைக் காட்டும் முத்திரைகளை தேசிய அரும் பொருட் காட்சியகத்தில் காணக் கூடியதாக உள்ளது**

## தேசிய தபால் அரும் பொருட்காட்சியகத்தின் ஆரம்பம்

தேசிய தபால் அரும் பொருட்காட்சியகம் முதன் முதலில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் அமைந்துள்ள தலைமை அஞ்சல் அலுவலகத்தில் 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போதைய பிரதித் தபால் அதிகாரியாக இருந்த ஏ.சிவபுத்ரதாசன், அடல் பஸ்ட், தலைமைத் தபால் அலுவலக தபால் அதிபர் கே.ஏ.உபசாந்த ஆகியோர் இந்த அரும் பொருட்காட்சியத்தை அமைக்க அனுசரணை வழங்கினர். எனினும், நடந்த உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக, இந்த அலுவலகம் தாக்கப்பட்டதால் அதனை மூடிவிடும் நிலை ஏற்பட்டது. மீண்டும் 2005 ஆம் ஆண்டு டி.ஆர்.விஜயவர்தன மாவத்தையில் தலைமை தபால் அலுவலகம் நிறுவப்பட்டது. அப்போதைய தபால் அதிபராகக் கடமையாற்றிய கே.எஸ்.ஏ.சேனாதீர என்பவரால் புதிய தபால் அலுவலகத்தில் அரும் பொருட்காட்சியகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதைய தபால் அதிகாரியான எம்.டி.கே.திசாநாயக்கவின் உதவியுடன் தபால், தந்தி, தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் வழிகாட்டலுடன் 2010 ஜூலை மாதம் 6 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தேசிய தபால் அரும் பொருட்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.

## காட்சிப் பொருட்கள்

தேசிய தபால் அரும் பொருட்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அரும் பொருட்கள் பின்வருமாறு பல்வேறு பிரிவுகளில் காணப்படுகின்றன.

## இலங்கையின் முற்காலச் செய்திப் பரிமாற்ற முறை

தேசிய தபால் அரும் பொருட்காட்சியகத்தினுள் நுழையும் போது அங்கு ஓவியம் ஒன்றைக் காணக்கூடியதாக உள்ளது. மேளம் கொட்டுதல், பறவைகள் மூலம் செய்தி அனுப்புதல் போன்ற முற்காலச் செய்திப் பரிமாற்றம் முதல் தற்போதைய நவீன செய்திப் பரிமாற்றம் வரை அதில் காணப்படுகின்றன.

## இலங்கை தபால் சேவையின் ஆரம்பம்

இலங்கையில் தபால் சேவை 17 ஆம் நூற்றாண்டில் அதாவது; ஒல்லாந்தரின் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அக் காலத்தில் ஒல்லாந்தர்கள் தமது குடியேற்ற நாடுகளிடையே செய்திப் பரிமாற்றத்தினைச் செய்யும் பொருட்டு, விசேட கப்பல் சேவை ஒன்றையும் ஆரம்பித்தனர். அது 'பெக்கட் போட் சேவை' எனப்பட்டது. ஒல்லாந்தரால் கொழும்பு, காலி, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பிரதான தபால் அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. அவை தவிர, நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தபால் அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாகியதும் தபால் அலுவலகங்கள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டன. இலங்கையில் முதல் தபால் அதிபராக இருந்தவர் பிரத்தானியரான கப்பிதான் கெனடி என்பவராவார்.

## தபால் தின முத்திரை

தபால் அலுவலகத்திற்குக் கொண்டு வரப்படும் கடிதங்களைப் பொறுப்பெடுத்ததை உறுதி செய்யும் பொருட்டு தபால் அலுவலகத்தின் பெயர், பொறுப்பேற்ற திகதி என்பனவற்றுடன் முத்திரையிடப்படும். அவற்றோடு, தபால் கட்டணம் செலுத்தியதாகவோ, செலுத்தாததாகவோ குறிப்பிட்டு இடப்படும் முத்திரை, வான் கடிதம், சேமிப்புக் கணக்கு, காசுக் கட்டளை என்பனவற்றுக்கான முத்திரைகளும் தபால் அலுவலகங்களில் உபயோகிக்கப்படுகின்றன. அவை தின முத்திரை, தபால் இலச்சினை என்றும் பிரிக்கப்படும். இலங்கையில் பழைய தபால் முத்திரையாகக் கணிக்கப்படுவது ஒல்லாந்தர் காலத்தில் பாவனையில் இருந்த வி.ஓ.சி.இலச்சினையுடன் கூடிய முத்திரையாகும். பிரித்தானியரின் காலத்திலும், சுதந்திரம் பெற்ற பின்னரும் இலங்கையின் தபால் அலுவலகங்களில் பாவனையில் இருந்த தபால் முத்திரைகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## தபால் போக்குவரத்து

இலங்கையில் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தபால்களை எடுத்துச் செல்லும் பொருட்டு மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள், ரிக்ஷோ வண்டிகள் என்பன பயன்படுத்தப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, பிற்காலத்தில் வாகனம், புகையிரதம், கப்பல்,விமானம் என்பன பயன்படுத்தப்பட்டன. இலங்கையின் தபால் போக்குவரத்துத் தொடர்பான பல பொருட்களை தேசிய தபால் அரும் பொருட்காட்சியகத்தில் காணலாம். போக்குவரத்திற்காகக் கடிதங்களை வைக்கும் பிரம்பினாலான கூடை. தபால் அலுவலகத்திற்கும், புகையிரத நிலையத்திற்கும் இடையே போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்ட ரிக்ஷோ வண்டி, புகையிரதம், தபால் அலுவலகங்களின் தேவைக்கு நீர் கொண்டு சென்ற பாத்திரங்கள், போக்குவரத்திற்கு உபயோகப்படுத்தப்பட்ட வாகனம், குதிரை வண்டி, மாட்டு வண்டி என்பனவற்றைப் பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்ட 'டென்டர்' கடிதக் கோவை போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்ட விமானங்களின் புகைப்படங்கள் ஆகியனவே இங்கு காணப்படுகின்றன.



## தந்தி சேவையின் ஆரம்பம்

1857 ஆம் ஆண்டு தபால் திணைக்களத்தின் மூலம் டெலிகிராப், சேவை ஆரம்பமாகியது. இதன்படி, முதலாவது சேவை கொழும்பிலிருந்து காலிவரை ஏற்படுத்தப்பட்டது. 1858 இல் கொழும்பிலிருந்து கண்டிக்கும், தலைமன்னாருக்கும் இச் சேவை விரிவுபடுத்தப்பட்டது. 1882 ஆம் ஆண்டு 600 மைல்களுக்கு டெலிகிராப் தொகுதிச் சேவையொன்றை கொழும்பிலிருந்து சென்னை வரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த வேலைகள் 1895 ஆம் ஆண்டு நிறைவுற்றது. மேலும், இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் செய்திப் பரிமாற்றங்கள் ஏற்பட்டன. முன்னர் பாவனையில் இருந்த பல உபகரணங்கள் தேசிய தபால் அரும் பொருட்காட்சியகத்தில் காணப்படுகின்றன.

## முத்திரை

தேசிய தபால் அரும் பொருட்காட்சியகத்தின் மேல்மாடி முத்திரைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு உலகின் முதல் முத்திரை, இலங்கையின் முதல் முத்திரை என்பனவற்றுடன் ஏராளமான பழைய முத்திரைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முத்திரைகளில் ஓவியம் சேர்க்கப்பட்டது ஐந்தாம் ஜோர்ஜ் மன்னனின் காலத்திலாகும். அவரது பதவியேற்பின் 25 ஆவது வருட ஞாபகார்த்தமாக முதன்முதல் ஓவியம் சேர்க்கப்பட்டது. அத்துடன், ஐந்தாம் ஜோர்ஜ் மன்னனின் உருவம், இலங்கையின் பல்வேறு பிரதேசங்களின் படங்கள் அடங்கிய பல முத்திரைகள் இங்கு காட்சியப்படுத்தப்பட்டுள்ளன.

**இரஞ்சித் ஜெயகர்**

**இலங்கையில் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தபால்களை எடுத்துச் செல்லும் பொருட்டு மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள், ரிக்ஷோ வண்டிகள் என்பன பயன்படுத்தப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, பிற்காலத்தில் வாகனம் புகையிரதம், கப்பல், விமானம் என்பன பயன்படுத்தப்பட்டன. இலங்கையின் தபால் போக்குவரத்துத் தொடர்பான பல பொருட்களை தேசிய தபால் அரும் பொருட்காட்சியகத்தில் காணலாம்**



1947 இல் வெளியிடப்பட்ட முத்திரை


தபால் பொதிகளை எடுத்துச்சென்ற ரிக்ஷோ வண்டி


தபால் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் (1950 ஆம் ஆண்டு)


கொழும்பு, மற்றும் புறநகர்ப்பகுதிகளில் தபால் பொதிகளை விநியோகிக்க பயன்படுத்தப்பட்ட சைக்கிள்


தபால் சேவைக்காக பயன்படுத்தப்பட்ட விமானம்


தபால் சேவகரின் உத்தியோகபூர்வ சீருடை மாதிரிகள்


'டெலிகிராப் மோஸ்' என அழைக்கப்படும் சமிக்ஞை அலகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் - II

பெயர்: .................................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. பின்வரும் பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

*சின்னச் சின்ன றோசாப் பூ*
*சிவப்பு வெள்ளை றோசாப் பூ*
*வண்ண வண்ண றோசாப் பூ*
*வாட்டமில்லா றோசாப் பூ*

*வட்டமான றோசாப் பூ*
*வளர்ந்து நிற்கும் றோசாப் பூ*
*பட்டுப் போன்ற றோசாப் பூ*
*பார்த்து மகிழும் றோசாப் பூ*

*இனிய காலை நேரம்*
*இதழ் விரித்துச் சிரிக்கும்*
*பனி மணிகள் சூடி*
*பளபளக்கும் கண்ணில்*

*முள்ளு வேலிக்குள்ளே*
*முகத்தைக் காட்டும் றோசாப் பூ*
*பள்ளு பாடி வண்டு*
*பாசம் கொள்ளும் றோசாப் பூ*

கவிஞர் - வாகரை வாணன்

(i) இப்பாடலில் கூறப்பட்டுள்ள பூ எது? ..........................................
(ii) பூவின் இரண்டு நிறங்களையும் எழுதுக. ..........................................
(iii) பாசம் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. ..........................................
(iv) 'முள்' என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. ..........................................
(v) இப்பாடலில் உள்ள அடுக்குமொழி ஒன்று தருக. ..........................................
(vi) 'வட்டமான றோசாப் பூ' என்பதன் அடைமொழியை எழுதுக. ..........................................
(vii) தேனீ ரீங்காரம் செய்யும் அதுபோல வண்டு?..........................................
(viii) இப்பாடலில் உள்ள இரட்டைக்கிளவியை எழுதுக. ..........................................
(ix) இங்குள்ள காலப்பெயரை எழுதுக. ..........................................
(x) 'இதழ் விரித்து சிரிக்கின்றது' என்பதை பன்மையில் எழுதுக. ..........................................

02. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) கூறினான்/சீடன்/சென்று/தனது/நடந்தவற்றைக்/குருவிடம்
..........................................................................................
(ii) திகைத்துப்/அசையாமல்/போய்/பேரனும்/சிறிது/தாத்தாவும்/நின்றனர்/நேரம்
..........................................................................................

03. பின்வரும் மரபுத்தொடரின் உட்கருத்தினை எழுதுக.

(i) தோள் கொடுத்தல் ..........................................
(ii) நாக்கு புரளுதல் ..........................................

04. பின்வரும் தொடர்மொழியின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக.

(i) எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்: ..........................................
(ii) கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி, பிழை பார்த்தல்: ..........................................

05. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) உணவு உண்ண முன் ............................ இட்டு கை கழுவுதல் நல்லது.
(சவுக்காரம், சவக்காரம், சவர்க்காரம்)
(ii) முயற்சி உடையார் ........................................ அடையார்.
(இகழ்ட்சி, இகழ்ச்சி, இகல்ச்சி)

06. உருவை நன்கு அவதானித்து அதற்குரிய ஆங்கிலச்சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.


(i) (ii) (iii)

.................... .................... ....................

07. கருத்தினை தமிழில் எழுதுக.

(i) Good Night : ..........................................
(ii) Please come in : ..........................................
(iii) What is your name : ..........................................


08. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டில் தமிழில் எழுதுக.




★ *09 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின்கீழ்க் கோடிடுக.*

09. சித்திரை மாதத்தில் பூக்கும் பூ எது?
(1) ஆவாரம் பூ (2) முள்முருக்கம் பூ (3) பிறைப் பூ (4) கார்த்திகைப் பூ

10. தான் செல்லும் இடமெல்லாம் தன்னோடு வாழ்விடத்தையும் கொண்டுசெல்லும் பிராணி எது?
(1) பாம்பு (2) பல்லி (3) நத்தை (4) கிளி

11. ஒரு தடவையில் அதிக முட்டைகளை இடும் பிராணி;
(1) (2) (3) (4)


12. கத்தியில் ஒட்டியுள்ள பலாப்பிசினை அகற்றுவதற்குப் பயன்படுத்தும் திரவம் எது?
(1) பன்னீர் (2) மண்ணெண்ணெய்
(3) பெற்றோல் (4) தேங்காய் எண்ணெய்

13. முயலைப் பிடித்து தூக்க வேண்டிய பகுதி;
(1) கழுத்துப்பகுதி (2) காதுகளில் (3) கால்களில் (4) வயிற்றுப்பகுதி

14. தவளை முட்டையின் நிறம் யாது?
(1) கறுப்பு (2) வெள்ளை (3) நீலம் (4) மஞ்சள்

15. கரையான், வண்டுகள் என்பனவற்றால் அரிக்கப்படாத மரம்;
(1) தென்னை (2) தேக்கு (3) பனை (4) பலா மரம்

16. பூமிக்கு மிகவும் அண்மையிலுள்ள கோள் எது?
(1) செவ்வாய் (2) சுக்கிரன் (3) புதன் (4) வியாழன்

17. வண்ணத்துப்பூச்சி எங்கு முட்டையிடும்?
(1) இலையின் மடலின் உட்புறத்தில் (2) நீர் தேங்கியுள்ள இடங்களில்
(3) இலையில் கீழ்ப்புறத்தில் (4) மரப்பொந்துகளில்

18. இலங்கையை ஆண்ட அந்நியர்கள் அல்லாதோர்;
(1) ஆங்கிலேயர் (2) ஒல்லாந்தர் (3) அரேபியர் (4) போர்த்துக்கேயர்


19. இலங்கையின் வரலாற்றைக் கூறும் நூல் எது?
(1) பைபிள் (2) மகாவம்சம் (3) திரிபீடகம் (4) திருக்குர்ஆன்


20. சுவரை நிலைக்குத்தாக கட்டுவதற்குப் பயன்படும் உபகரணம் எது?
(1) (2) (3) (4)


21. மிக அதிகமான மக்கள் பயணம் செய்யக்கூடிய போக்குவரத்துச் சாதனம் எது?
(1) விமானம் (2) பேரூந்து (3) புகைவண்டி (4) கார்

22. தொங்கும் துணி ஒன்றில் மிகவும் கூடுதலாக மேல் உறிஞ்சப்படும் திரவம்;
(1) தேங்காய் எண்ணெய் (2) நீர்
(3) பெற்றோல் (4) மண்ணெண்ணெய்

23. பண்டைய காலத்தில் உணவு வகைகளை நீண்ட காலமாகப் பாதுகாத்து வைக்கும் முறை எது?
(1) குளிரூட்டியில் வைத்து (2) தேனில் அமிழ்த்தி வைத்து
(3) தகரப் பேணியில் வைத்து (2) உப்பிடுதல் முறை

24. நெல்லைக் குற்றி அரிசியை வேறாக்குவதற்குப் பயன்படுத்தும் உபகரணம்;
(1) (2) (3) (4)


25.  இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள ஒலிம்பிக் சின்னத்தின் சிவப்பு வளையம் குறிக்கும் கண்டம்;
(1) அமெரிக்காக் கண்டம் (2) ஆசியாக் கண்டம்
(3) ஐரோப்பாக் கண்டம் (3) அவுஸ்திரேலியாக் கண்டம்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்கள், நூலகங்களினால் பெறப்படும் அறிவு



**மனிதனது அறிவை வளர்த்தெடுப்பதில் நூல்கள் பெரும் பங்காற்றுகின்றன. அந்தவகையில், வாழ்க்கைக்குரிய வழிகாட்டியாக அமைந்து, சாதனை படைக்கத் தூண்டுவது சிறந்த நூல்களே! மனக் கோணல்களை மாற்றுவதும் மானத்தின் மேன்மையைக் காப்பதும் நல்ல மனோபாவத்தை வளர்ப்பதும் இந்த நூல்கள்தான்**

## கல்வி

## முகாமைத்துவம் - 42

## கற்றலுக்கான ஆலோசனைகள்

மனிதனது அனைத்துச் செல்வங்களிலும் மகத்தான செல்வம் அறிவுச் செல்வம் எனக் கருதப்படுகின்றது. அச்செல்வத்தை மாணவர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு சேமிக்க வேண்டும். அத்தகைய அறிவுச் செல்வங்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள உகந்த இடம் நூலகங்கள் ஆகும்.




மாணவர்கள் பாடசாலைக் கல்வியை மட்டும் கற்காது, அதனோடு இணைந்து நூலகக் கல்வியையும் கற்றுக் கொள்ள வேண்டும். இது வெளிவாரியான அறிவையும் அபிவிருத்தி அடையச் செய்யும். மாணவர்கள் கல்வி கற்கும் காலங்களில் நூல்களைச் சேகரித்து வீட்டில் சிறு நூலகங்களை அமைத்து அவற்றைக் கற்றுக்கொள்வதுடன், தமக்குக் கிடைக்கும் புத்தகங்களை செம்மையாகப் பாதுகாத்துப் பயன்பெறவும் வேண்டும்.

பொதுவாக, மனிதனது அறிவுப் பசிக்கு தீனி போடுவது பயன் மிகு நூல்களே. நூல்களுக்குச் செலவிடும் தொகை செலவன்று; அது அறிவின் மூலதனம் என்றே கூறவேண்டும். பொது நூல்களையும் அறிவு நூல்களையும் பாடசாலைக் காலத்திலிருந்தே கற்பது சிறப்பானது. இதனை வழக்கமாகக் கொண்டால், அதிகளவான நூல்களைக் கற்று நிறைவான விடயங்களை அறிந்துகொள்ள முடியும்.



பொழுதுபோக்குகளாக நல்ல நூல்களை வாசிப்பதை நாம் வழக்கமாக்கிக் கொள்ளலாம். இதனால், எமக்கு நிறைந்த பயனும் கிடைக்கின்றது. பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில்; பாடசாலை அச்சுப்புத்தகங்களில் பெரும்பாலான விடயங்கள் சுருக்கமாகவே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஒவ்வொரு பாடத்திலும் மேலும் தெளிவு பெறவும் விரிவாக அறிந்து கொள்ளவும் நூலகங்களில் உள்ள நூல்கள் பெரிதும் துணை புரியக்கூடியன.




மேலும், பாடசாலையில் ஒப்படை, கணிப்பீடு போன்ற சோதனை முறைகளைப் பூர்த்தி செய்யவும் நூலக நூல்களைப் பயன்படுத்தலாம். இது சாதகமான விளைவை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும். இதனூடாக தேடிக் கற்க வேண்டும், வெளியுலகைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஊக்கம் மாணவர்களுக்கு அதிகரிக்கும். இதற்கமைய, பாடசாலைகளிலும் அவசியம் நூலகங்கள் அமைக்கப்படல் வேண்டும்.



இன்றைய நிலையில், சில பாடசாலை மாணவர்கள் நூலகத்திற்குச் சென்று கற்கவேண்டிய நேரத்தை வீணான பேச்சுக்களிலும் செயல்களிலும் கழிக்கின்றனர். எனவே, மாணவர்கள் பாடசாலையில் நூலகத்திற்கு என ஒதுக்கப்பட்ட நேரத்தை நூல்களை வாசிக்க மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

அத்துடன், கற்றல் என்பது ஆசிரியர் கற்பிக்கும் விடயங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டதன்று; மாறாக, பாடசாலை அறிவுடன் வாழ்க்கைக்குத் தேவையான மேலதிக அறிவையும் பெறுவதையே இது குறிக்கின்றது. கல்வி கற்பதற்கு வரையறை என்பதே கிடையாது. எனவே, இயன்றளவு நல்ல நூல்களை வாசித்துப் பயன்பெறுவதோடு, நூலகங்களிலிருந்தும் அந்தப் பயனைப் பெற்றுக்கொள்ள மாணவர்கள் முனையவேண்டும். (தொடரும்)

**எம்.ஏ.[illegible]**

# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலய மாணவன் ஆர்.குருபரன், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப். நிப்லா, 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஹஸ்வெவ காஹிரா மு.வித்தியாலய மாணவியாவார்.



மு.அபிராம், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றார்.



அஹஸ்வெவ காஹிரா மு.வித்தியாலய மாணவி எஃப்.மிப்ரா, 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ந.ரமணன், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலய மாணவராவார்.



சு.பூர்வஜா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவியாவார்.



யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலய மாணவன் க.நர்த்தனன், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ஞா.குகப்பிரியன், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றார்.



கிரி/ மெத்தேகெடிய மு.வித்தியாலய மாணவி எஸ்.டீ.றஹ்மா, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சஹாப்தீன்-சம்சுல் கரீமா தம்பதியரின் புதல்வியாவார்.



எஃப். அப்ஸான், 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவியாவார்.



எம்.ஏ.அஸ்மா, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கிரி/மெத்தேகெடிய மு.வித்தியாலய மாணவியான இவர், அஸ்கர்- நஜீமா தம்பதியரின் புதல்வியாவார்.



ஆயிஷா ஷஹானி, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவியாவார்.



வட்டவளை த.ம.வித்தியாலய மாணவன் செ.ஸ்டீபன், 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க/மலைமகள் இந்து மத். கல்லூரி மாணவி பா.ரசிக்கா, 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பாலசுப்பிரமணியம்-ராஜகாந்தம் தம்பதியரின் புதல்வியாவார்.



அஹஸ்வெவ காஹிரா மு.வித்தியாலய மாணவி எம்.என்.சபியா, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கிரி/மெத்தேகெடிய மு.வித்தியாலய மாணவி ஏ.டபிள்யூ. அஸ்மா, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் வாஹித்-ஹலீமா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.என்.ரிஸ்மா, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஹஸ்வெவ சாஹிரா மு.வித்தியாலய மாணவியாவார்.



எம்.ஆர்.யாஸிர், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலய மாணவராவார்.



கெகிராவை மு.ம.வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த மாணவர்கள், தமது வகுப்பாசிரியையுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். மாணவர்களின் விபரங்கள் வருமாறு;

(இ.வ) எஃப்.நதா (157 புள்ளிகள்), ஆர்.உபைதுல் ரஹ்மான் (157 புள்ளிகள்), எம்.இஹ்ஸான் (177 புள்ளிகள்), எம்.அஸ்மீர் (142 புள்ளிகள்), இஜாஸ் ரஸூல் (140 புள்ளிகள்), எஃப்.ஸஹ்ரா (153 புள்ளிகள்).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்து நதி நாகரீக








உலக நாகரிகங்கள் வரிசையில், இந்து நதிக்கரை நாகரிகத்திற்கு முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. மிக அண்மைக் காலத்தில் அதாவது, கி.பி.1922 ஆம் ஆண்டளவிலேயே இதுபற்றிய தகவல்கள் கண்டறியப்பட்டாலும், இந்து நாகரிகத்தின் வரலாறு அதிலிருந்து மிகவும் பின்னோக்கிச் செல்கின்றது. இந்தியாவின் இந்து நதிக்கரையை அண்மித்து உருவாகிய இந்த நாகரிகம் பற்றிக் கவனம் செலுத்தும்போது, அது குறித்தான பலவிதமான சிறப்பம்சங்களை அறிய முடிகின்றது.



## பசுபதி சின்னம்

கொம்புள்ள கடவுளாகக் கருதப்படும் இந்த சின்னத்திற்கும் மதவழிபாட்டில் முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தமை புலப்படுகின்றது. தலையில் காணப்படும் இரண்டு கொம்புகள் போன்ற அமைப்புடன் ஆசனத்தில் அமர்ந்த நிலையில் இந்த சின்னம் காணப்படுகின்றது. அந்த உருவத்தைச் சூழ காண்டா மிருகம், புலி, காட்டெருமைகள் ஆகிய மிருக உருவங்களையும் காண முடிகின்றது. இதன்மூலம் இந்து நதிக்கரை மக்களின் கடவுள் வழிபாட்டு முறைகள் புலனாகின்றன.

புரோடோ ஒஸ்ரோலொய்ட், எல்பய்ன், மொங்கோலொய்ட் போன்ற கலப்பு இன மானிடவர்க்கம் இங்கு வாழ்ந்துள்ளமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இந்து நாகரிகத்தின் முக்கிய செயற்பாடாக கலைச் செயற்பாடுகள் விளங்குகின்றன. அந்தவகையில், இதுவரை உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிறப்புமிகு கலைத்துவப் படைப்புக்களில் இந்து நதி நாகரிகத்தில் உருவான கலைப் பொக்கிஷங்களும் பிரசித்தி பெற்றவை.

## இந்து நதி நாகரிகத்தின் ஆரம்பம்

இந்தியாவில் வளர்ச்சியடைந்த நாகரிகங்களில் இந்து நதிக்கரை நாகரிகத்திற்கு பல வரலாறுகள் உள்ளன. புதிய விவசாய யுகத்தின் பின்னர் வளர்ச்சி கண்ட திடீர் காலப்பிரிவுக்குட்பட்ட நாகரிகமாக இது கருதப்படுகின்றது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்களின் கருத்தின்படி, கி.மு.3250-2750 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பிரிவுக்குரியதாக இந்து நதிக்கரை நாகரிகம் இருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

தொல்பொருள் அகழ்வு ஆதாரங்களின்படி, 1200 X700 சதுர மைல் பரப்பளவுக்குட்பட்ட பகுதியில் இந்த நாகரிகம் பரந்து காணப்பட்டிருக்கின்றது. பாகிஸ்தானுக்குரிய சிந்து மாகாணத்தில் வர்ஜன் மாவட்டத்தில் அமைந்துள்ள மொஹஞ்சதாரோ நகரமும் பஞ்சாப்பின் 'ரவி' கங்கைக்கு அருகில் அமைந்துள்ள ஹரப்பா நகரமும் இந்த நாகரிகத்திற்குரிய பிரதான இரு நகரங்களாகும். சிறந்த வளமும் செழிப்பும் மிக்கதாக கருதப்படும் இந்து நதிக்கரை நாகரிகத்தைப் பற்றிய எழுத்து மூலமான மூலாதாரங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன.

ஆனாலும், இந்த நாகரிகம் நிலவிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் உயர் கலைத் திறமைகளை பெற்றிருந்தனர் என்பது தெளிவாகியுள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கலைப்படைப்புகளும் சிதைவுகளும் இதற்கு சான்று பகர்கின்றன. கல் மற்றும் உலோகங்களில் உருவாக்கப்பட்ட சிலைகள், உலோகப் பொருட்கள், ஆபரணங்கள், கருவிகள், சின்னங்கள், கட்டட நிர்மாணப் பொருட்கள் என்பன இதற்குரிய சான்றுகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

## தேவதையின் சிற்பம்

இந்து நதிக்கரை நாகரிக மக்களின் மத அனுஷ்டானங்களை எடுத்துக்காட்டும் வகையில் சில சான்றுகளும் அகழ்வாராய்ச்சிகளின்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.



தேவதையை கடவுளாக வழிபடும் வழக்கம் இருந்தமைக்கான சான்றாக தேவதைகளின் சிலைகள் இங்கு காணப்பட்டன. இந்த உருவத்தின் தலையில் தலைப்பாகை போன்ற அமைப்புக் காணப்படுவதோடு, அது பல்வேறு ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டும் காணப்படுகின்றது. இந்த உருவத்திற்கு ஒரு கரம் மட்டுமே காணப்படுகின்றது. இந்து நதி நாகரிக மக்கள் மத்தியில் இந்த தேவதை உருவத்திற்கு அதி முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பது தெளிவாகின்றது.

## மதகுரு உருவம்

மொஹஞ்சதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட சிற்பங்களில் மற்றொரு முக்கிய கலை அம்சமாக இந்த மத குருவின் உருவம் விளங்குகின்றது. இந்த சிற்பம் ஆண் ஒருவரின் இடுப்பக்கு மேற்பட்ட பகுதியை உடையதாகும். வெண் பளிங்குக் கல்லால் செதுக்கப்பட்டுள்ள இந்த உருவத்தின் உயரம் 19 செ.மீற்றர்களாகும். இது மிகவும் சாந்தமான முக அமைப்பை உடையதாகவும் உயிரோட்டம் உள்ளவாறும் செதுக்கப்பட்டுள்ளது. நெற்றியின் மத்தியில் வளையம் போன்ற அமைப்பில் சின்னம் ஒன்று காணப்படுகின்றது.



இந்த சின்னம் அக்காலத்தில் உலோகங்கள் மற்றும் ஆபரணங்களில் பயன்படுத்தும் மரபாக இருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## அழகியின் உருவம்

ஹரப்பா நகர ஆய்வுகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட விசேட கலைப் படைப்பாக, இந்த வெண்கலச் சிலை காணப்படுகின்றது. அதன் உயரம் 4 1/2 அங்குலமாகும்.அமைதியான அழகிய பெண்ணின் உருவ அமைப்பில் இது செதுக்கப்பட்டுள்ளது. தலை முடியை சீவி, அலங்காரமாக சுருட்டி மேல் நோக்கிக் கட்டியவாறும் ஒரு காலை சற்று வளைவாக வைத்தபடியும்



ஒரு கையை இடுப்பில் வைத்த நிலையிலும் இந்தப் பெண் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற மேலும் சில சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தேவலோகக் கன்னியர்களாகக் கருதும் வகையில் இந்த பெண் சிலைகள் உருவமைக்கப்பட்டிருப்பது இவற்றின் சிறப்பம்சமாகும். இந்த சிற்பங்கள் தற்போது புதுடில்லி அரும்பொருட் காட்சி சாலையில், வைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப் பொக்கிஷங்கள்





பட்டுள்ளன. கழுத்தில் மாலையும் இரண்டு கரங்களிலும் வளையல்கள் அணிந்த நிலையில் இச்சி[illegible]ள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## திமிலுடைய காளை மாடு

திமில்கொண்ட காளை மாட்டின் உருவம் பொதிந்த இந்த சின்னம்



மிகவும் பிரசித்திபெற்றது. இத்தகைய உருவங்கள் பொறிக்கப்பட்ட 25 இற்கும் மேற்பட்ட சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. காளை மாட்டின் முழுமையான கம்பீரத் தோற்றம் தெளிவாக வார்க்கப்பட்டிருக்கின்றது. சிவன் கடவுளின் வாகனமாகக் கருதப்படும் நந்தி மாட்டினையே இதனூடாக சித்தரித்திருப்பதாக ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர். இந்த மாட்டின் தலை மற்றும் கழுத்துப் பகுதியில் அலை வடிவிலான அலங்காரங்கள் காணப்படுகின்றன.

## வெற்றுடம்பு உருவம்



கிரேக்க கலை நுட்பங்களில் காணப்படும் சிறப்பம்சத்தை இந்து நதிக்கரை நாகரிகத்திலும் காண முடிகின்றது. கிரேக்க சிற்பக்கலையைப் போன்று செதுக்கப்பட்ட கம்பீரமானதும் மிகவும் வீரம் மிக்கதுமான உடல் அமைப்பையே இந்த சிலை வெளிப்படுத்துகின்றது. சிவப்பு நிறம் கொண்ட சுண்ணாம்புக் கல்லைப் பயன்படுத்தியே இச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கு கைகளையுடைய சிவனின் உருவத்திற்கு ஒப்ப இந்த உருவம் இருக்கின்றது. இந்த உருவத்தில் தலை, கை, கால்கள் காணப்படவில்லை. இதற்கமைய, இந்த உருவத்தில் அப்பகுதிகளை வெவ்வேறாகப் பொருத்தியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இந்த உருவம் உயிரோட்டம் உள்ளவாறு உருவாக்கப்பட்டுள்ளது.

## சாம்பல் நிற மணல் கல்லால் வடிக்கப்பட்ட சிற்பம்

ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட மனித உருவச்சிலை சாம்பல் நிற மணல் கலந்த கற்களால் வடிக்கப்பட்டுள்ளது. இந்த சிலை இடது காலை மேல்நோக்கி உயர்த்தியதாக இருக்கின்றமையினால், நடனக் கலைக்குரிய சிவன் கடவுளின் பாத்திரத்தை வெளிப்படுத்தும் நடராஜ சிலை அமைப்பை அது ஒத்திருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



## சின்னங்கள்


இந்து நதிக்கரை நாகரிக மக்களின் கலாசார மரபுகளை வெளிப்படுத்தும்



வகையில் சில அடையாளச் சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்து நாகரிகத்திற்குட்பட்ட மக்[illegible] வழக்கங்கள், இறை வழிபாட்டு மார்க்கங்கள், எழுத்துக் குறிப்புக்கள் என்பனவற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்த சின்னங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சுமார் 2,000 வரையான சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்ட இவை வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. ஆனால், வர்த்தக செயற்பாடுகளில் இவற்றை எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தியிருப்பார்கள் என்று இதுவரை கண்டறியப்படவில்லை.

இவை சதுரம், வளைவு, எண்கோணி, வட்டம் ஆகிய வடிவங்களில் உள்ளன. இந்த சின்னங்களில் கடவுள்களின் உருவங்கள், மனித உருவம், மிருகங்களின் உருவங்கள் என்பன பொறிக்கப்பட்டுள்ளன. தவிர, இச்சின்னங்களில் எழுத்துருவமும் காணப்படுகின்றது. அந்த எழுத்துக்களை இன்றுவரையில் எவராலும் வாசித்து அறிய முடியவில்லை. அவை குறிக்கும் தகவல் என்ன என்பதையும் கண்டுகொள்ள முடியவில்லை. இந்த சின்னங்களை ஆராய்ந்த எஸ்.ஆர்.ராஓ என்ற ஆய்வாளர் "இந்து நதிக்கரை மக்கள் தொடர்பாடலில் பல்வேறு விதமான அடையாளக் குறிப்புக்களை பயன்படுத்தியிருக்கலாம்" என்று கூறுகின்றார். இவையே பிற்காலத்தில் எழுத்துருவம் பெற்றுள்ளதாகவும் மொசபதேமிய


a
b
c

நாகரிகத்தில் காணப்படும் எழுத்துக்கலைக்கு சமமானதாக அவை இருப்பதாகவும் அவர் மேலும் கூறுகின்றார்.

**அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒழுங்குமுறை விதிகளெல்லாம்
தெரிஞ்சுக்க வேணும்- தம்பி
ஒன்றுபட்டு வாழநீயும்
கத்துக்க வேணும்!
வரிசைமுறை பண்புகளை
தெரிந்துகொண்டாலே- தம்பி
ஒன்றுபட்டு வாழநீயும்
கத்துக்க வேணும்!

பெற்றோருக்கு எந்நாளும்
உதவிட வேணும்-தம்பி
பெரியோரை மதித்திடவே
பழகிட வேணும்!

பொது இடங்களில் போகும்போது
அமைதி காக்கணும்-தம்பி
பெரியோர்கள் போற்றிடவே
நீ வாழ்ந்திட வேணும்!

# வாசிப்பும் ஒரு கலையே

வாசிப்பு என்பது ஒரு சாதாரண செயற்பாடு அல்ல. அது கலைகளில் ஒன்றாகவே திகழ்கின்றது. வாசிப்பை உணர்வு தழுவிய ஒரு தொழிற்பாடாக நோக்கும்போது மாத்திரமே அது ஒரு கலையாகிறது.

எத்தகைய ஒரு செயலிலும் நேர்த்தி, ஒழுங்கு என்பன பேணப்படும்போது, அச்செயல் அழகையும் சிறப்பையும் பெறுகிறது. நேர்த்தி, ஒழுங்கு என்பவற்றால் பிறர் உள்ளத்தை வசீகரிக்க முடியும். வாசிப்பும் அது போன்றதே.



'குறைந்த நேரம்; நீண்ட பயன்' என்பது வாசிப்பின் தத்துவமாகும். தேவைக்காக மாத்திரம் கருவியாக வாசிப்பைப் பயன்படுத்தாது' ஒரு கிரமமான ஒழுங்கில் வாசிப்பைப் பேணிவர அது மிகுந்த பயனளிக்கும். வாசிப்பதால் அறிவு விருத்தியாவதோடு, சுய கருத்துக்கள் தோற்றம் பெறுவதற்கும் அது ஏதுவாகிறது.

எந்த ஒரு வாசகனும் எடுத்த எடுப்பிலேயே கடின சொற்பிரயோகப் பகுதிக்குள் நுழைந்தால் வாசிப்பின் மீதான ஆர்வம் குறைவதோடு, அதன் மீதான வெறுப்பும் வேரூன்றத் தொடங்கி விடும். ஆதலால், இலகுவான பகுதியிலிருந்தே கடினமான பகுதியை நோக்கிச் செல்ல வேண்டும்.

'மீள் வாசித்தல்' வாசிப்பின் பிறிதொரு நுட்ப முறையாகும். வாசகன் வாசிக்கும் போது அதில் மன ஒருமைப்பாட்டை செலுத்தாமல் விளக்கமின்றி வாசிப்பானாயின் அதில் எவ்வித பயனும் இருக்காது. ஆகையால் வாசிக்கும் போது விளங்கவில்லையெனின் மீள மீள வாசித்து கிரகித்துக் கொள்வதே பயனுள்ளதாகும்.

எனவே, வாசிப்பை அர்த்தமுள்ள செயற்பாடாக்க மேற்படி நுட்பங்களைக் கடைப்பிடித் தொழுக வேண்டும்.

எஃவ்.பாரா,
உயன்வத்த




# சுற்றாடல் பாதுகாப்பு



சுற்றாடல் என்றால் என்ன என்று நோக்கினால் எம்மைச் சூழவுள்ளவைதான் சுற்றாடல் என்று கூறலாம். பொதுவாக நாம் பார்க்கின்ற சூழலானது பல்வேறு வகையிலும் தாக்கமடைந்துள்ளது. அந்தவகையில் இயற்கைக்கு மாறான, மனிதனின் தவறான நடவடிக்கைகளால்தான் சூழல் மாசடைகின்றது. அழிவுகளின் விளிம்பில் இருக்கும் நமது சுற்றாடலைப் பாதுகாப்பது இளைய சமுதாயமாகிய எமது கடமையாகும்.

மனிதனின் அன்றாட நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, அவை ஏதோ ஒரு வகையில் சூழல் சீர்கேட்டுக்குக் காரணமாகவே அமைந்துள்ளன. உதாரணமாக, தொழிற்சாலைகளின் அதிகரிப்பினால் எந்தெந்த வழிமுறைகளில் எமது சூழல் பாதிக்கப்படுகின்றது என்பதை தற்போது கண்கூடாகவே காணக்கூடியதாக உள்ளது. தொழிற்சாலைகளின் கழிவு நீர் ஆறுகளில் விடப்படுவதனால் ஆற்று நீர் மாசடைகிறது. புகை வெளியேற்றத்தினால் வளிமண்டலம் மாசடைகிறது. இவ்வாறு பல்வேறு வழிகளினாலும் சுற்றாடல் மாசடைகிறது. எனவே இவற்றிலிந்து சூழலைப் பாதுகாப்பது அவசியமாகும்.

அத்துடன், பல்வேறு தேவைகளுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. காடு என்பது ஒரு நாட்டின் வளம் என்றே கூற வேண்டும். காடுகள் இல்லையென்றால் அதனைப் பாலைவனம் என்றுதான் கூறலாம். எனவே, நாம் காட்டுவளத்தைப் பாதுகாப்போமேயானால், நமது சுற்றாடலின் ஒரு பகுதி பாதுகாக்கப்பட்டதாகவே கருதப்படும். ஒரு மரத்தை வெட்டும் போது அதற்குப் பதில் இன்னுமொரு மரத்தை நட்டு வைப்போமானால், சுயமாகவே சூழல் பாதுகாக்கப்படும்.

மேலும், நாம் எமது சூழலில் இருந்து தேவையின்றி ஓர் இலையைக் கூடப் பறிப்போமாயின் அதுவும் ஒரு சூழலுக்கெதிராக நாம் செய்யும் சதியாகவே மாறிவிடும். அந்த ஓர் இலை கூட நமது சூழலைப் பாதுகாக்கத் துணை புரிகின்றது. எனவே, சுற்றாடலைப் பாதுகாப்பதில் நாம் சிறியோருக்கும், பெரியோருக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். எனவே, இளைய சமுதாயமாகிய நாம் சுற்றாடலைப் பாதுகாக்க வீறு கொண்டு எழுவோமாக.

பாத்திமா றிஸ்வானா ரவுப்,
கே/மாவ கொடே கொட மு.வி.,
[illegible]மாதகம

# தம்பி, தங்கைகளே!

**'விஜய்' வாசகர்களான தம்பி தங்கைகளே..**

மாணவர் ஆக்கங்கள் 'பகுதிக்கு உங்களிடமிருந்து கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன வரவேற்கப்படுகின்றன. பலர் இப்பகுதிக்கு வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்த விடயங்களையே பார்த்து எழுதி அனுப்புகின்றனர். இவ்வாறு செய்வதால் நீங்கள் சுயமாக சிந்தித்து எழுதும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். நீங்களே சுயமாக சிந்தித்து ஆக்கங்களை எழுதி அனுப்ப முயற்சி செய்யுங்கள். அவ்வாறு நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் தரமானவையாக இருந்தால் தவறுகள் இருப்பினும் திருத்திப் பிரசுரிக்கப்படும்.



**அனுப்ப வேண்டிய முகவரி:**



மாணவர் ஆக்கங்கள்
'விஜய்'
08.ஜானுப்பிட்டிய றுக்கு வீதி.,
கொழும்பு -02.

# தெரு நாய்க்கு உதவியதால்....

அநாதைச் சிறுவன் ஒருவன் ஊர் ஊராகப் பிச்சையெடுத்தபடி ஓர் ஊரை வந்தடைந்தான். அந்த ஊரின் ஓர் இடத்தில் 'நாய்களுக்கான ஓட்டப்போட்டி விரும்பியவர்கள் தங்கள் நாய்களைப் பங்குபற்றச் செய்யலாம், என ஓர் அறிவிப்புப் பலகை காணப்பட்டது. வெற்றியீட்டும் நாயின் சொந்தக்காரருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் எனவும் கீழே குறிப்பிடப்பட்டிருந்தது. சிறுவனுக்கோ படிப்பறிவு இல்லை அதை வாசித்துப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை. அவனுக்குக் கிடைத்த உணவை உண்டு கொண்டிருக்கையில் அங்கு ஒரு தெரு நாய் வந்தது. சிறுவன் அதன்மீது இரக்கப்பட்டு தனது உணவில் சிறிதளவை அதற்குக் கொடுத்தான். அந்த நாயும் நன்றியுடன் வாலை ஆட்டியபடி அதனை உண்டது. அத்துடன், அவன் போகுமிடமெல்லாம் அந்த நாயும் பின்னே செல்லத் தொடங்கியது. ஒரு நாள் நாய்களுக்கான போட்டி நடக்கும் மைதானத்துக்கு அருகில் தவறுதலாக அவன் சென்றுவிட்டான். அன்று நாய்களுக்கான போட்டி நடந்துகொண்டிருந்தது. சிறுவனையும்,



நாயையும் கண்ட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். கேலி பேசினர். அவமானப்படுத்தினர். காரணம் அந்தப் போட்டிக்காக வந்திருந்த அனைத்து நாய்களும் உயர்ந்த இனத்தைச் சார்ந்தவை. அவற்றின் உரிமையாளர்கள் அனைவரும் பெரிய செல்வந்தர்கள். இதேவேளை போட்டி ஆரம்பமானது. அப்போது அவனுடன் வந்த நாய் மற்ற நாய்களைக் கண்டு பயந்து ஓடத்தொடங்கியது. தனக்குப் பின்னால் ஓடிவரும் நாய்கள் தன்னைக் கடிக்கத்தான் ஓடிவருகின்றன என நினைத்தபடியே அது மிக வேகமாக ஓடியது. விளைவு சிறுவனின் தெருநாய் உயர் இன நாய்கள் அனைத்தையும் பின்தள்ளி விட்டு போட்டியில் முதலாவது இடத்தை தனதாக்கிக் கொண்டது. அனைவரும் அந்தச் சிறுவனைப் பாராட்டினார்கள். அப்பொழுது தான் அவன் நாய்களுக்கான ஓட்டப் போட்டி நடந்ததை அறிந்து கொண்டான். முதல் பரிசான பெருந்தொகை பணப்பரிசும் அவனுக்கே கிடைத்தது. தனது அதிஸ்டத்தை எண்ணி மகிழ்ந்தான். அநாதையான தனக்கு நல்வாழ்வளித்த அந்த நாயை அன்புடன் அள்ளி அணைத்துக்கொண்டான்.



இ.லிஸ்ரிக்கா,
மன்னார் மடுக்கரை அ.த.க.
பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செரோக்கி' மொழிக்கு எழுத்துருவம் பிறந்தது எப்படி?


**வெள்ளையர்கள் முன்னேறுவது எழுத்தால் என்பதை உணர்ந்தான் ஒருவன். நம் மொழிக்கும் எழுத்தைக் கண்டுபிடித்தால் என்ன என்று யோசித்தான் அவன். முயற்சித்தான். வெற்றி அவனை நாடி ஓடி வந்தது. இத்தனைக்கும் அவன் பாடசாலை சென்று பயிலாத ஒருவன். அவன் பெயர் செக்கோயா.**

அமெரிக்காவில் 'செரோக்கிஸ்' என்னும் செவ்விந்திய இனத்தவர் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்றனர். அக்காலத்தில் அவர்களுடைய மொழிக்கு எழுத்துருவம் இருக்கவில்லை. வெள்ளையர்கள் அமெரிக்காவில் குடியேறுவதற்கு முன் செரோக்கிஸ் இனத்தவர் அங்கு சிறப்பாக வாழ்ந்து வந்தனர்.ஆனால், பின்னர் குடியேறிய வெள்ளையர், செரோக்கிய இனத்தவரை அமெரிக்காவின் வளமான பகுதியிலிருந்து வறண்ட பகுதிக்கு விரட்டி விட்டனர். இவர்களோடு சேர்ந்து செக்கோயாவும் விரட்டியடிக்கப்பட்டான்.

அக்காலத்தில் செரோக்கியர் தமது மொழிக்கு எழுத்துரு இல்லாமைக்காக மிகவும் கவலையடைந்தனர். எழுத்துருவை உருவாக்கிக் கொள்ளும் போதிய அறிவு கூட அவர்களிடம் இருக்கவில்லை. விரட்டியடிக்கப்பட்ட செக்கோயா தனது இனத்தவரின் கவலை பற்றி அறிந்தான். தமது மொழிக்கான எழுத்துருவைக் கண்டுபிடிப்பதில் அவன் கவனம் செலுத்தினான்.

வெள்ளையர்களால் அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைப் பார்த்தான். வெள்ளையர்கள் அறிவாளியாவதற்கு எழுத்துத்தான் காரணம் என்று புரிந்து கொண்டான். தன் இன மக்கள் எழுதவும், வாசிக்கவும் திறமை பெற்றால் வெள்ளையரைப்போல் வல்லமையும் வலிமையும் பெற்றிடலாம் என்று அவன் உணர்ந்தான். 1809 ஆம் ஆண்டு தனது மொழிக்கு எழுத்துரு கண்டுபிடிக்கும் பணியை செக்கோயா ஆரம்பித்தான். 1812 ஆம் ஆண்டு அவன் அமெரிக்கப்படையணியில் சேர்க்கப்பட்டதனால், அவனது எழுத்துருவாக்கும் பணி சிறிது காலம் தடைப்பட்டது. பின்னர் ஐரோப்பியப் போர் முடிந்ததும் தனது பணியை மீண்டும் தொடர்ந்தான்

செரோக்கியர் தமது பேச்சில் 86 ஒலிகளை உபயோகிப்பதை தனது நீண்ட நாள் ஆராய்ச்சிக்குப் பின்னர் செக்கோயா கண்டறிந்து கொண்டான். அவ்வொலிகளுக்கு அவன் முதலில் எழுத்துக்களை உருவாக்கலானான். ஆங்கில எழுத்துக்களை இன்னதென்று அறியாதவனாக இருந்தபோதிலும், அவன் அதிலிருந்து எழுத்துக்களை எடுத்தாண்டு தனது மொழிக்கு எழுத்துருவைக் கொடுத்தான்.





செக்கோயா தான் கண்டுபிடித்த எழுத்து வடிவங்களை தன்னுடைய ஆறுவயதுச் சிறுமிக்குக் கற்பித்தான். சிறுமி நன்றாகக் கற்றறிந்ததும், அவளையும் அழைத்துக்கொண்டு, செரோக்கியின் தலைநகரான நியூ எக்கோடாவை அடைந்தான். தனது கண்டுபிடிப்பு பற்றி மொழி சம்பந்தப்பட்ட தலைமைக்குழுவிடம் தெரிவித்தான். குழு உறுப்பினர்கள் அவனைப் பரிசோதிக்க விரும்பினர்.

செக்கோயாவின் ஆறு வயதுச் சிறுமி தனியறையில் அடைக்கப்பட்டாள். செக்கோயா வெளியில் நிறுத்தப்பட்டான். குழுவினர் சிறுமியிடம் ஒரு செய்தியைச் சொன்னார்கள். அந்தச் சிறுமி தந்தை தனக்குக் கற்றுக் கொடுத்த எழுத்தைக் கொண்டு அந்தச் செய்தியை எழுதினாள். எழுதப்பட்ட செய்தியை செக்கோயாவிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்கள். செக்கோயா படித்தான். பிழையின்றிப் படித்தான். சபையில் ஆரவாரம். பாராட்டுக்கள்! செக்கோயா பூரிப்படைந்து போனான்! அவனது உழைப்புக்குத் தகுந்த வெற்றி கிட்டிவிட்டதை உணர்ந்தான்.

செக்கோயாவால் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துக்கள் செரோக்கி முழுவதும் அறிவிக்கப்பட்டது. செரோக்கி மொழிக்கு செக்கோயா என்ற ஒரு வானால் எழுத்துரு உருவாக்கப்பட்டது. அன்று முதல் அமெரிக்காவின் பல இடங்களுக்கு அவன் நினைவால் பெயர் வைக்கப்பட்டது. வொஷிங்டனில் அவனது சிலை ஒன்று கூட எழுப்பப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

**செம்மைத்துளியான்**

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3993

பி.செர்ணா, தரம்-3[B], பண்டாரவளை த.ம.வி., பண்டாரவளை.



அங்.இல: 3994

பி.பிரதீபன், தரம்-01, கே/தெஹி புனித. மதியால் த.ம.வித்., எட்டியாந்தோட்டை.



அங்.இல: 3995

வை.எம்.ஹிராஸ்கான், தரம்-06, மட்/ஓட்டமாவடி தே.பாட., மட்டக்களப்பு.



அங்.இல: 3996

கு.விமலன், தரம்-06, கந்தபுரம் வாணி.வித்., வவுனியா.



அங்.இல: 3997

யு.எம்.தில்சான், தரம்-9[J], அக்/அஸ்ஸிராஜ் ம.வித்., அக்கரைப்பற்று-01.



அங்.இல: 3998

இ.சயிஷோ, தரம்-09, யா/கைதடி நுணாவில் அ.த.க.பாட., சாவகச்சேரி.



அங்.இல: 3999

எம்.ரிஸான் ஹய்கர், தரம்-08, மதீனா ம.கல்., மாவனல்லை.



அங்.இல: 4000

மொஹமட் மின்னாச், (உயர்தரம்), ஜி/ஷாஹிரா ச.கல்., ஜீன்தொட்ட.



அங்.இல: 4001

ஞானராஜன் தனுஜன், தரம்-9[A], கிளி/கிளிநொச்சி ம.வித்., கிளிநொச்சி.



அங்.இல: 4002

ஏ.சி.றிம்கான், தரம்-10, மட்/சாத்யை வித்.,



அங்.இல: 4003

ஜெ.எஸ்.ஜெ.ரிஸ்கான், (பல்கலை), வெளிவாரிப் பட்டப்படிப்பு, பேராதனை.



அங்.இல: 4004

பத்மநாதன் ஷாண்ராஜ், (உயர்தரம்), முள்/வித்தியானந்த கல., முள்ளியவளை.

## சாதனையாளர்

# ரொனால்ட் ரொஸ் -மலேரியா (1857-1932)

மலேரியா நோய்க்குரிய காரணத்தைக் கண்டுபிடித்து மருத்துவ விஞ்ஞானத்திற்குப் பெரும்பணி புரிந்தவர்தான் ரொனால்ட் ரொஸ் அவர்கள்.1857 மே 13 ஆம் நாள் ஓர் ஆங்கிலோ இந்தியக் குடும்பத்தில் பிறந்தவரே ரொஸ். கவிதை, இசை இரண்டிலும் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் 1874 இல் புனித பர்த்தலோமியோ மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து எம்.ஆர்.எஸ்.டிப்ளோமா பட்டத்தைப் பெற்றார்.




பின்னர் இந்தியாவிற்கு வந்து சென்னை மருத்துவ சேவையில் (Madras Medical Service) இணைந்து மலேரியா பற்றிய ஆய்வில் இறங்கினார். அதன் விளைவாக நுளம்புகளே, மலேரியா நோய்க்குக் காரணம் என்பதை உறுதியாக நம்பினார். அத்தோடு, நுளம்பு வகைகள் பல விதம் என்பதையும் கண்டுணர்ந்தார். ஏற்கனவே இவை அனைத்தையும் உறுதியாக நம்பிய சேர். பெட்ரிக் மான்சன் என்பவர் ரொனால்ட் ரொஸ் அவர்களின் முயற்சிக்கு பக்கபலமாக இருந்தார்.



ரொனால்ட் ரொஸ்

ஒருநாள் குறிப்பிட்ட நுளம்பொன்றைப் பிடித்து ரொஸ் ஆய்வு செய்துகொண்டிருக்கையில் அந்த நுளம்பின் இறகில் மூன்று கறுப்புக் கோடுகள் இருப்பதையும் கண்டார். அந்த நுளம்பு இனத்திற்கு 'அனோபிலிஸ்' என பெயரிட்டார்.

மலேரியா நோயாளி ஒருவரின் இரத்தத்தை 'அனோபிலிஸ்' நுளம்பைக்கொண்டு உறிஞ்சச் செய்து அந்த ஒரு நுண் நோக்கியின் மூலம் பரிசோதித்த ரொஸ் அந்த நுளம்பின் வயிற்றில் சில கரும்புள்ளிகள் இருப்பதைக் கண்டறிந்தார். மேலும் மேலும் அனோபிலிஸ் நுளம்புகளைப் பிடித்து ஆய்வுகளை நடத்தினார். 1897 இல் ரொஸ்க்கு முழுமையான வெற்றிகிடைத்தது.

1898 ஆம் ஆண்டு இந்திய அரசு ரொஸுக்கு கல்கத்தாவில் ஒரு சோதனைக் கூடத்தை அமைத்துக் கொடுத்தது. ரொஸ் அதன்பின் நடத்திய ஆய்வுகளின் விளைவாக 'மலேரியா பாரென்ன ஜீவி'களின் வளர்ச்சியின் மூலம் நுளம்புகள் எவ்வாறு மனிதனின் உடலில் மலேரியாவை பரப்புகின்றன என்பதைக் கண்டறிந்தார்.

மனித குலத்தைப் பிடித்துத் துன்புறுத்திய 'மலேரியா' எனும் கொடிய நோய் தனது உழைப்பின் பயனால் அழிந்து வருவதையும் அதனால், மக்கள் பயன்பெறுவதையும் கண்டு மனம் மகிழ்ந்தார் ரொனால்ட் ரொஸ். 1932 இல் இவ்வுலக வாழ்வை அவர் நீத்தார். **-ஆர்.ஜே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை கல்வி-கலாசார மேம்பாட்டுத் தாபனத்தின் புதிய நூலக கட்டடத் திறப்பு விழாவின்போது, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த கல்முனை நண்பர்கள் அமைப்பின் தலைவர் கீஸ் லங்வெல்ட் உரையாற்றுவதையும் வருகை தந்திருந்தோரில் ஒரு பகுதியினர் மற்றும் புதிய கட்டடத்தின் தோற்றத்தினையும் படங்களில் காணலாம்.

(தகவல்: நிப்றாஸ் மன்சூர் -கல்முனை)

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



மாகாண மட்டத்தில் நடைபெற்ற தரம்-04 மாணவர்களிடையிலான விரைவு கணிதச் செய்கைப் போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்த மட்/பெரியகல்லாறு மெ.மி.த.பெண்கள் பாடசாலை மாணவர்களான (இ:வ) வ.ஷதீத் பிரதீப், இ.தனுலக்ஷி, க. அக்ஷயன், வீ.ரச்சுதன் ஆகியோருடன் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஆர்.சந்திரமோகன், தரம்-7,
மூன்பிளேன் த.வித்., நுவரெலியா.



எம்.என்.சுமையா, தரம்-7,
அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.



கேமிதா விறிஸ்மந்தி,
தரம்-3ᶜ,
விஜயரத்தினம் இ.மத்.கல்.,
நீர்கொழும்பு.



ஏ.சமீஹா,
தரம்-3ᶜ, சேர்.ராசிக் பரீட் மு.வித்.,
கொழும்பு-15.



ஹேனகெதர மன்பஉல் ஹஸனாத் பாலர் பாடசாலையின் கலைவிழா, அண்மையில் கு/ஹேனகெதர முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது, மாணவன் ரீஸா தாஸிம், கலை நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு சிறப்பிப்பதைப் படத்தில் காணலாம்.


(தகவல்: முஸம்மில்)



ஏ.அப்ஸல், தரம்-11,
பாபுஸ்ஸலாம் மு.ம.வித்.,
புஸ்யால.



உ.மிதுலா, தரம்-4,
சாவகச்சேரி ம.கல்., சாவகச்சேரி.



எஸ்.சுஷாந்தினி,
தரம்-6,
அம்பாக்கோட்டை த.வித்.,
அம்பாக்கோட்டை.



பி.தினேஸ், தரம்-9,
ஹவுப்பை த.வித்., இரத்தினபுரி.



ஆர்.தனுஷன்,
தரம்-2ᴬ, த.த.ம.வித்.,
பாமாஸ்டன்.



ஏ.ஜி.அப்துல்லாஹ், தரம்-8,
அரபா மு.ம.வித்., ஹந்தஸ்ஸ.

## ஓவியம் வரைவோம் - 37

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்றூப்

**இன்றைய பாடத்தில் பூரணமான காட்சியொன்றை வரைவோம்.**

### ஓய்வெடுக்கும் விவசாயிகள்


வயலில் வேலை செய்துவிட்டு இளைப்பாறும் விவசாயிகளின் படமொன்றை வரைவோம்.

✱ A படத்திற்கமைய, தேவையான அடிப்படை ரேகைகளை வரைந்து கொள்வோம். (நாம் வரையும் அடிப்படை ரேகைகள் எமது மனதில் தோன்றும் கற்பனைக்கு ஏற்ப அமைய வேண்டும். நாம் எப்படியான காட்சியொன்றை வரையப் போகின்றோம் என்பதை மனதில்கொண்டு, அடிப்படை ரேகைகளை வரைவோமானால், சிறந்த கற்பனைப் படைப்பொன்றை உருவாக்க முடியும்).

✱ பின்னர் B படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, நாம் ஏற்கனவே வரைந்த ரேகைகளுக்கு சமாந்தரமாக தேவையான ரேகைகளை வரைந்து படத்தைப் பூரணப்படுத்துவோம்.

குறிப்பு: பின்னணி சரியாகவும் சமச்சீராகவும் அமையுமாறும் உருவங்கள் சமச்சீராக அமையுமாறும் பார்த்துக்கொள்ளுங்கள். விரும்பியவாறு வர்ணங்களைத் தீட்டுங்கள்.

படம் A




படம் B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்பமரத்தடியில் கண்டது என்ன?



**அப்போது, மாணிக்கம்பிள்ளைக்குச் சொந்தமான மாட்டு வண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. அழகு வேலைப்பாடுகள் கொண்ட அந்த வண்டியை மீசைக்காரமணியம் ஓட்டி வந்தான். திருக்குமாரும், வித்தியாபரனும் நின்ற இடத்தை வண்டி நெருங்கியதும் நின்றது**




அரியாலையூர் சி.சிவதாசன்

தந்தையார் மாணிக்கம்பிள்ளை பட்டணம் நோக்கிப் பயணமானது வித்தியாபரனுக்கு மிகவும் சந்தோசத்தை ஏற்படுத்தியது. தகப்பனின் துப்பாக்கியைச் சிரமமின்றி எடுத்துக்கொள்ள அது வசதியாக இருந்தது. வித்தியும், திருவும் அன்று காலை வேப்பங்கேணிக் கிராமத்தைச் சுற்றிப் பார்க்க வீட்டை விட்டு வெளியேறினார்கள். நேராக வேப்பங்கேணிக் கிராம எல்லையில் அமைந்துள்ள காளி அம்மன் சிலையடிக்கு வந்தார்கள். பேய் இருப்பதாகக் கூறப்படும் வேப்பமரத்தடியை அவர்கள் நோட்டமிட்டார்கள். வேப்பமரத்தில் எதுவித மாற்றமும் தெரியவில்லை. இருந்தபோதும் வேப்பமரத்தின் அடிவேர்ப் பகுதியில் இரண்டு போத்தல்கள் இருப்பதை திருக்குமார் கண்டான். அந்தப் போத்தல்களை எடுத்து வாய்ப்பகுதியை மணந்து பார்த்தான். மண்ணெண்ணெய் வாசம் அடித்தது. அவனுக்கு இது சந்தேகத்தை ஏற்படுத்தியது. இங்கு ஏன் மண்ணெண்ணெய் போத்தல்கள் வரவேண்டும்? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட அவன் அதனைத் தன் மைத்துனனுக்குக் காண்பித்தான்.

வித்தியாபரனும் போத்தலை முகர்ந்து பார்த்தான். மண்ணெண்ணெய் வாசம்தான் என்பதை அவனும் உணர்ந்துகொண்டான். யாராவது நடமாடியுள்ளார்களா? என சுற்றுப்புறம் முழுவதும் அவர்கள் பார்வையைச் செலுத்தினார்கள். சிறிது தூரம் பார்வையைச் செலுத்திய திருக்குமார் அங்கு மனிதர்களின் பாதச் சுவடுகள் தொடர்ந்து செல்வதை அவதானித்தான். அந்தப் பாதச் சுவடுகள் வயல் பக்கமாக மண்பாதையைக் கடந்து செல்வதையும் அவன் அவதானித்தான். அந்தக் காலடிகள் மேலும் அவனுக்குச் சந்தேகத்தைத் தோற்றுவித்தன. அந்தக் காலடிச் சுவடுகளை அவன் தன் மைத்துனன் "வித்தியாபரனுக்கு காண்பித்தான். வித்தியாபரன் அவை இவ்விடங்களில் நேற்று வந்து சென்றவர்களின் காலடியாக இருக்கலாம். அதை ஏன் எனக்குக் காட்டுகிறாய்? எதைக் கண்டாலும் உனக்குச் சந்தேகம் தான். அவை மனிதக்காலடிகள்தானே, பேய்க்குக் கால்கள் இல்லை என்பது உனக்குத் தெரியாதா"? என்று கேட்டான்.

பின்னர் அந்த இளைஞர்கள் இருவரும் சிறிது நேரம் வேப்பமர வேர்களில் அமர்ந்திருந்தார்கள். "வித்தியாபரா? நீபேயென்ற ஒன்று இருப்பதாகவே நினைக்கிறாய் அல்லவா? இந்தப் பேயின் மர்மத்தைக் கண்டு பிடிக்கும் நம்பிக்கை உனக்குத் துளியளவுமில்லை. உனது கிராமத்து மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் உனக்கிருந்தால் முதலில் உன்னிடம் குடிகொண்டிருக்கும் பேய் பயத்தை முதலில் விரட்டியடி. இன்றிரவு இங்கு வருவோம். நெஞ்சில் துணிவோடு இன்றிரவு கட்டாயம் நீ என்னோடு வந்தே தீரவேண்டும். வருவாயா? வித்தியாபரா "திருக்குமாரா"? உன்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கையைப் பாராட்டுகிறேன். நான் உனக்கு உதவியாக நிச்சயம் வருவேன். ஆனால், அதனால் ஏதும் ஆபத்து ஏற்படுமோ என்றுதான் பயமாக இருக்கிறது".

திருக்குமார் சிரித்தான். "வித்தியாபரா! நீ என் மாமன் மகன், உனக்கு எந்த ஆபத்து வந்தாலும் அது எனக்கு ஏற்பட்டது போன்றதே. நாம் புத்திசாலித் தனமாக நடப்பதன் மூலம் எந்த ஆபத்தையும் தவிர்த்துக் கொள்ளலாம்" எனத் திருக்குமார் கூறியதும் இருவரும் அவ்விடத்தை விட்டுச் செல்ல ஆயத்தமானார்கள். அப்போது, மாணிக்கம்பிள்ளைக்குச் சொந்தமான மாட்டு வண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. அழகு வேலைப்பாடுகள் கொண்ட அந்த வண்டியை மீசைக்காரமணியம் ஓட்டி வந்தான். திருக்குமாரும். வித்தியாபரனும் நின்ற இடத்தை வண்டி நெருங்கியதும் நின்றது.

வண்டியின் பின்புறத்தே மாணிக்கம்பிள்ளையின் மனைவி இருந்தார். தாயைக் கண்ட வித்தியாபரன் வண்டிக்கருகே போனான். திருக்குமாரும் உடன் சென்றான். மகனையும், மருமகனையும் வேப்பமரத்தடியில் கண்ட மாணிக்கம்பிள்ளையின் மனைவி அதிர்ச்சியுடன் "ஏன் இங்கு வந்தீர்கள். இந்த இடத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? உடனே வீடு செல்லுங்கள்" என்றாள்.

பகலிலும் இங்கு பேய் நடமாடுகிறதா? இப்பாதையில் பலர் போய் வருகிறார்கள்தானே? நாங்களும் இவ்விடத்தைப் பார்க்கவே வந்தோம்" என்றான் திருக்குமார். "சரி! சரி! பார்த்தது போதும் வீட்டுக்குப் போங்கள். நான் பக்கத்துக் கிராமத்தில் நடைபெறும் திருமண வீட்டிற்குச் செல்கிறேன். இருட்டும் முன் வந்துவிடுவேன்" என்று மாணிக்கம்பிள்ளையின் மனைவி கூறியதும். மாட்டு வண்டி அவ்விடத்தை விட்டு நகர்ந்தது........ (தொடரும்)

## ஆரோக்கியமாக வாழ....



முன்னொரு காலத்தில் குடகு மலையை வீரநிலவன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். ஒருமுறை அவன் வேட்டையாடக் காட்டிற்குத் தனியே சென்றான். அதிகமான விலங்குகளை வேட்டையாடினான். இதனால், களைப்படைந்த அவனுக்குத் தாகம் எடுத்தது.

எங்கே தண்ணீர் கிடைக்கும் என்று நாலா பக்கமும் பார்த்தான். தொலைவில் குடிசை ஒன்று அவன் கண்ணில் பட்டது. உடனே அவன் அந்த இடத்தை நோக்கி விரைந்தான். அந்தக் குடிசைக்கு வெளியே குடும்பப் பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள். சிறுவர்களாக இருந்த தன் மகன்களுக்கு அவள் உணவு ஊட்டிக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த மன்னன், "அம்மா! தாகமாக உள்ளது. தண்ணீர் தர முடியுமா?" என்று கேட்டான். தண்ணீர் கொண்டு வருவதற்காகக் குடிசைக்குள் அப்பெண் சென்றாள். அப்போது அந்தச் சிறுவர்களைப் பார்த்தான் மன்னன். நல்ல உடல்நலத்துடன் கொழுகொழுவென்று இருக்கும் இவர்கள் என்ன சாப்பிடுகின்றனர் என்று கவனித்தான். அந்த சிறுவர்கள் கூழ் அருந்துவதையும் கண்டுகொண்டான். இவர்கள் கூழை உண்டு இவ்வளவு வலிமையுடன் இருக்கிறார்களே. என் மகனும் இவர்களைப் போன்ற சிறுவன்தானே, வேளை தவறாமல் சத்துள்ள உணவைச் சாப்பிடுகிறான். அவனைக் கவனித்துக் கொள்ள அரண்மனை மருத்துவர்கள் உள்ளனர். இருந்தும் அவன் நோஞ்சானாக உள்ளான். ஏதேனும் நோயினால் அடிக்கடி துன்பப் படுகிறான்.ஆனால், இவர்கள் இங்கு நல்ல உடல்நலத்துடன் விளங்க என்ன காரணமாக இருக்கும், என்று சிந்தித்தான் மன்னன்.

அப்போது அக் குழந்தைகளின் தாய் தண்ணீர்ப் பாத்திரத்துடன் வெளியே வந்தாள். "இதோ! தண்ணீர் குடியுங்கள்,' என்று பாத்திரத்தை நீட்டினாள். அவனும் அத்தண்ணீரைக் குடித்தான். தனது சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள நினைத்த அவன், அதுபற்றி அவளிடம் கேட்டான்.

அப்போது, அவள் "என் மகன்கள் உடல்நலத்தோடு இருக்க மூன்று வழிமுறைகளைப் பின்பற்றுகிறேன்" என்று கூறினாள். "முதலாவது அவர்கள் பசி எடுத்த பின்னரே உண்ண உணவு கொடுக்கிறேன். இரண்டாவது உணவு நேரம் தவிர மற்ற நேரங்களில் எதையும் சாப்பிடக் கொடுப்பதில்லை. மூன்றாவது தேவையான அளவே உண்ண வேண்டும். அதிகமாக உண்ணக் கூடாது. இந்த மூன்று வழிமுறைகளையும் பின்பற்றுகிறேன். இதனை யார் பின்பற்றினாலும் நல்ல உடல்நலத்துடன் விளங்குவர்! என்றாள். கல்வியறிவோ, நாகரிகமோ இல்லாத அவளுக்கிருக்கும் அறிவைக் கண்டு வியந்தான் மன்னன். அவளுக்கு நன்றி கூறிவிட்டு மன்னன் அரண்மனை நோக்கித் திரும்பினான். அங்கு சென்ற அவன் உடனே முரசு அடிப்பவனை அழைத்தான்.

அந்தப் பெண் சொன்ன மூன்று வழிமுறைகளையும் அவனிடம் கூறினான்.

"நம் நாட்டு மக்கள் உண்ணும்போது இவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். இதை நாடெங்கும் அறிவிக்கிறேன்" என்றான். முரசு அடிப்பவனும் இந்தச் செய்தியினை நாடெங்கும் அறிவித்தான். அந்நாட்டு மக்கள் அன்றுமுதல் அந்த மூன்று வழிமுறைகளையும் பின்பற்றினர். இதனால், நல்ல உடல்நலத்தோடு இளவரசனும் அந்நாட்டு மக்களும் சுகமாக வாழ்ந்து வரலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் இலங்கை பற்றிய ஒரு சிறிய கட்டுரையைப் பார்ப்போம்

## ශ්‍රී ලංකාව

1. අපේ රට ශ්‍රී ලංකාවයි.
2. මෙය ලස්සන දූපතකි.
3. ලංකාව ඉන්දියන් සාගරයේ පිහිටා තිබේ.
4. මෙහි මධ්‍යම ප්‍රදේශයේ කඳු තිබේ.
5. ශ්‍රී පාද කන්ද ප්‍රසිද්ධය.
6. ලංකාවේ බොහෝ ගංගා දක්නට ලැබේ.
7. මහවැලි ගඟ බොහෝ දිගය.
8. ලංකාවේ තේ,රබර්,පොල්,වී ආදි බෝග වැවෙයි.
9. ලංකාවේ සිංහල, දෙමළ, මුස්ලිම් යන ජාතිකයෝ සමගියෙන් ජීවත් වෙති.

## ஸ்ரீ லங்காவ

1. அபே ரட ஸ்ரீ லங்காவய்.
2. மெய லஸ்ஸன தூபதகி.
3. லங்காவ இந்தியன் சாகரயே பிஹிடா திபே.
4. மெஹி மத்யம ப்ரதேஷயே கந்து திபே.
5. ஸ்ரீ பாத கந்த பிரசித்தய.
6. லங்காவே பொஹோ கங்கா தக்னட லெபே.
7. மஹவெலி கங்க பொஹோ திகய.
8. லங்காவே தே, றபர், பொல், வீ ஆதி போக வெவெய்.
9. லங்காவே சிங்ஹள, தெமள, முஸ்லிம் யன ஜாதிகயோ சமகியென் ஜீவத் வெதி.

## இலங்கை

1. எமது நாடு இலங்கை.
2. இது அழகான ஒரு தீவாகும்.
3. இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது.
4. இங்கு மத்திய பிரதேசத்தில் மலைகள் உள்ளன.
5. சிவனொளி பாத மலை பிரசித்தி பெற்றது.
6. இலங்கையில் பல நதிகள் காணப்படுகின்றன.
7. மகாவலி கங்கை மிகவும் நீளமானது.
8. இலங்கையில் தேயிலை, றப்பர், தென்னை, நெல் ஆகிய பயிர்கள் விளைகின்றன.
9. இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய இன மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. எமது நாடு இலங்கை
..................................................................
ii. இலங்கை அழகான ஒரு தீவாகும்.
..................................................................
iii. மகாவலி கங்கை மிகவும் நீளமானது.
..................................................................
iv. இலங்கையின் மத்திய பிரதேசத்தில் மலைகள் உள்ளன.
..................................................................



**இடைவெளியை நிரப்புக**

1. මෙය.................................................දූපතකි.
2. ලංකාව.................................................පිහිටා තිබේ.
3. ලංකාවේ බොහෝ.................................................දක්නට ලැබේ.
4. .................................................තේ,රබර්,පොල්,වී ආදි බෝග වැවෙයි.




✱ 'Were' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை மாத்திரம், தனியொரு வினைச் சொல்லாகக் கையாண்டு அமைக்கப்படும் வாக்கியங்கள் பற்றிக் கடந்த பாடங்களில் கற்றோம் அல்லவா? அவ்வாக்கியங்களை இறந்தகால தனி வாக்கியங்கள் (Past Simple Tense) எனக் குறிப்பிடலாம்.

✱ இனி அடுத்த பாடத்துக்கு வருவோம். அதாவது, 'Were' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை, (Past Tense Auxiliary Verb) நிகழ்கால எச்சவினையுடன் (Present Participle) அதாவது, 'ING' சேர்ந்த வினைச்சொல்லுடன் கையாண்டு அமைக்கப்படும் வாக்கியங்கள், இறந்தகால தொடர் வாக்கியங்கள் (Past Continuous Tense) என அழைக்கப்படுகின்றன.

✱ இறந்தகால தனி வாக்கியத்தையும் இறந்தகால தொடர் வாக்கியத்தையும் இங்கே ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்ப்போம்.

(அ) நேற்று நீ வீட்டில் இருந்தாய்.
Yesterday you were at home.

**குறிப்பு: மேற்படி வாக்கியம் இறந்தகால தனி வாக்கியம்** (Past Simple Tense ) **ஆகும். இங்கே, 'were' எனும் இறந்தகால வினைச்சொல், தனியொரு வினைச்சொல்லாக வாக்கியத்தில் இடம்பெற்றுள்ளது.**

(ஆ) நேற்று இரவு நீ உறங்கிக்கொண்டு இருந்தாய்.
Yesterday night you were sleeping.

**குறிப்பு: மேற்படி வாக்கியத்தில், 'Were' எனும் இறந்தகால துணை வினைச்சொல், 'Sleeping' எனும் நிகழ்கால எச்சவினையுடன்** (Present Participle) **சேர்ந்து இடம்பெற்றுள்ளது. இத்தகைய வாக்கியம், இறந்தகால தொடர் வாக்கியம்** (Past Continuous Tense) **எனப்படுகின்றது.**

✱ மேலும் உதாரணங்களை இங்கே பயில்வோம்.

(இ) நேற்று நீங்கள் அனைவரும் வகுப்பில் இருந்தீர்கள்.
Yesterday you all were in the class.
(இறந்தகால தனி வாக்கியம்- Past Simple Tense)

(ஈ) நேற்று மாலை நீங்கள் அனைவரும் படித்துக்கொண்டு இருந்தீர்கள்.
Yesterday evening you all were studying.
(இறந்தகால தொடர் வாக்கியம்-Past Continuous Tense).

✱ நீங்கள் அனைவரும் இருந்தீர்கள்.
You all were.

✱ நீங்கள் அனைவரும் படித்துக்கொண்டு இருந்தீர்கள்.
You all were studying.

(உ) நேற்று நாங்கள் தோட்டத்தில் இருந்தோம்.
Yesterday we were in the garden.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஊ) நேற்று மாலை நாங்கள் விளையாடிக்கொண்டு இருந்தோம்.
Yesterday evening we were playing.
(இறந்தகால தொடர் வாக்கியம்-Past Continuous Tense)


✱ நாங்கள் இருந்தோம்.
We were.

✱ நாங்கள் விளையாடிக்கொண்டு இருந்தோம்.
We were playing.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்தில் அழிவை நோக்கியுள்ள கரையோரம்



தாய்லாந்து நாட்டின் உலகப் புகழ் பெற்ற 'பட்டாயா' என்ற கடற்கரையோரப் பகுதி இன்னும் ஐந்து வருடங்களில் அழிவடையக்கூடிய காரணிகள் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உல்லாசப் பயணிகளின் அபிமானத்தை வென்ற இக் கரையோரப் பகுதி சூரியக் குளியல், கடல் விளையாட்டுக்கள் என பல்வேறு அம்சங்களுக்கும் பிரசித்தி பெற்றுள்ளதால், அந்நாட்டிற்கு கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் ஒரு பகுதியாகவும் இருக்கின்றது.

மேற்படி 'பட்டாயா' கடற்கரையானது தினமும் இரண்டு மீற்றர் அளவு கடலரிப்பு ஏற்பட்டு கடல் நீர் நிலப்பகுதியை ஆக்கிரமித்து வருவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இன்னும் ஐந்து வருடங்களில் இப்பகுதிகளில் உல்லாசப் பயணிகளையே காணமுடியாத அளவிற்கு அழிவடைந்துவிடும் என்றும் எச்சரிக்கை செய்யப்படுகின்றது.


## தெரிந்து கொள்வோம்



* இலங்கையில் நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னன் யார்?
  **பண்டுகாபய மன்னன். 44 வருடங்கள் ஆட்சி செய்தான்.**



* 'பாஞ்சாலி சபதம்' என்ற காவியத்தை இயற்றியவர் யார்?
  **மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.**



* கணிதத்தின் தந்தையெனப் போற்றப்படுபவர் யார்?
  **ஆக்கிமிடிஸ்.**



* சுனாமி ஏற்பட கடலின் அடியில் நிலநடுக்கம் ஏற்பட வேண்டும். 'ரிச்டர்' அளவில் எந்த அளவுக்கு மேல் இந்த நிலநடுக்கம் இருந்தால் சுனாமி ஏற்படும்?
  **ரிச்டர் அளவில் 8 மேல் நிகழ வேண்டும்.**



* இலங்கையில் கறுவா ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது?
  **கமபுறுபிடிய.**



* அனுராதபுரக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிறந்த 'சந்திர வட்டக்கல்' எங்கே காணப்படுகின்றது?
  **பிசோமாளிகாவ.**



* மனித இருதயத்தின் சராசரி நிறை என்ன?
  **280 கிராம்.**



* சூரியனிலிருந்து பூமி மூன்றாவது இடத்தில் உள்ளது. முதலாவது (சூரியனின் அருகில்) இடத்தில் உள்ள கோள் எது?
  **புதன்.**



* ஐக்கிய நாடுகள் சபையில் பாடல் பாடிய பெண்மணி யார்?
  **எம்.எஸ்.சுப்புலச்சுமி.**



* 'சுயெஸ்' கால்வாய் மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கின்றது. 'சுயெஸ்' கால்வாயின் நீளம் என்ன?
  **101 மைல்.. (162 கி.மீ).**



* வியட்நாம் போர் அண்மைக்கால வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். அதனைத் தலைமை தாங்கி நடாத்திய வியட்நாம் தலைவர் யார்?
  **அங்கல் ஹை என அழைக்கப்பட்ட ஹொசிமின் ஆவார்.**
* 'முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிகெட்போட்டி' எங்கு? எப்போது? நடைபெற்றது. இதில் எந்த அணி வெற்றிபெற்றது?
  **இங்கிலாந்தில் 1975 இல் நடைபெற்றது. மே.இந்திய தீவுகள் வெற்றிபெற்றது.**
* 'உளவியலின் தந்தை' எனப் போற்றப்படுபவர் யார்?
  **சிக்மன் பிரய்ட்.**

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

# நேபாளத்தின் புதிய பிரதமராக கனால்



நேபாளம் நாட்டின் புதிய பிரதமராக ஜலநாத் கனால் என்ற கொம்யூனிஸ்ட் தலைவர் தெரிவாகியுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதத்திலிருந்து நேபாளத்திற்கு புதிய பிரதமர் ஒருவரைத் தெரிவுசெய்ய முடியாமல் ஏழுமாத காலமாக இழுபறி நிலை நீடித்து வந்தது. 16 சுற்றுக்கள் தேர்தல்கள் நடந்த போதிலும் 17 ஆவது சுற்றிலேயே ஜலநாத் கனால் வெற்றி பெற்றுள்ளார். வாக்கெடுப்பின் போது, கனால் 368 வாக்குகளையும், எதிரணித் தலைவரான ராம்சந்ரா 122 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.



எனவே, அதிகமான வாக்குகளைப் பெற்ற நிலையில் கனால் நேபாளத்தின் புதிய பிரதமராகத் தெரிவாகியுள்ளார். இருப்பினும், மாவோவாதிகளின் தலைவரான பிரசன்டா பிரதமர் பதவிக்கான போட்டியிலிருந்து விலகியமையாலேயே கனால் இந்தகைய வெற்றியை பெற முடிந்துள்ளதாகவும் கருதப்படுகின்றது. எனவே, இந்த இருவருக்குமிடையே ஏதேனும் ரகசிய ஒப்பந்தங்கள் இருக்கலாம் என்றும் எதிர்க்கட்சிகள் சந்தேகம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


## துளிச் செய்திகள்

அமெரிக்கா, கெனடா பிராந்தியப் பகுதிகளில் ஏற்பட்ட பனிப்புயல் காரணமாக இருபதிற்கும் மேற்பட்டோர் மரணமடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால், போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. இப்பனிப்புயலின் காரணமாக, பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.



***



மியன்மாரில் ஜனநாயக ரீதியிலான முதலாவது ஜனாதிபதியாக முன்னாள் இராணுவத் தலைவரான தெயின் செயின் என்பவர் தெரிவாகியுள்ளார். இருப்பினும் 20 வருடங்களின் பின்னர் நடைபெற்ற இத் தேர்தலானது மோசடியாக நடைபெற்றதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

***

ஜோர்தான் நாட்டில் நடைபெற்ற பாரிய ஆர்ப்பாட்டங்களையடுத்து அந்நாட்டின் மன்னரான அப்துல்லா அமைச்சரவையைக் கலைத்து புதிய பிரதமராக பறூக் பகித் என்பவரை நியமித்துள்ளார். எனினும், இவரது நியமனத்தை ஏற்பதற்கு எதிர்க்கட்சிகள் மறுப்புத் தெரிவித்துள்ளன.



**அற்லஸ் கேள்வி - 295**

**கேள்வி:** தாய்லாந்தில் அழிவை எதிர்நோக்கியுள்ள கடற்கரைப் பகுதியின் பெயர் என்ன?

சரியான விடை.................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 295, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

போட்டி இல - 293 இன் சரியான விடை: 2005

**பரிசு பெறுவோர்**

வசுந்தரா, 14, சாகர வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04

எம்.எச்.நுஹா, 31/10, ஹில் வீதி, கம்பளை.

சி.பவிதா, 60, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICC Cricket World Cup 2011

# உலகக் கிண்ணத்தை யார் கைப்பற்றுவார்கள்?



## விமர்சனப் பார்வையை மாற்றிக்கொள்வோம்

இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்பவர் யார்? இந்தக் கேள்விக்கான தேடல்கள், விமர்சனங்கள், தீர்க்கதரிசனக் கருத்துக்கள் என்று பலவிதமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொருவரும் தத்தமது பார்வையில் இந்த அணிதான் கிண்ணத்தை வெல்லும் என்று ஒவ்வொரு நாட்டைக் குறிப்பிட்டுக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் கிண்ணத்தை வெல்லக்கூடிய அணி எது? அல்லது கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று விரும்பப்படும் அணி எது? என்பது இருவேறு பார்வைகளாகும். ஆனால், இதில் அநேகமானோர் இந்த அணிதான் வெல்லவேண்டும் என்ற விருப்பத்திற்கு முதலிடத்தைக் கொடுத்தே தமது கருத்துக்களை முன்வைப்பவர்களாக் உள்ளனர். அதன்படி, தத்தமது நாடுகள் மீது அபிமானம் கொண்டவர்கள், தமது நாட்டு அணியே கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற விருப்பத்தில் தம்மையும் அறியாமல் தமது நாடு வெல்லக்கூடிய சாதகமான அம்சங்களை மட்டும் முன் வைத்து நிச்சயமாக தமது அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று கூறுகின்றனர். இது உண்மையான நடுநிலையான விமர்சனப் பார்வையாக இருக்கப் போவதில்லை. இன்னும் சில விமர்சகர்களோ அண்மைக்காலமாக தமது பார்வைக்கு எட்டிய சில போட்டிகளை மாத்திரம் பார்த்து விட்டு அந்தப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் திறமையை எடைபோட்ட பின்னர் அந்த அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று விமர்சனம் செய்கின்றனர். இதுவும் ஒருவகையில் தவறான கணிப்பாகவே அமையக்கூடும்.





ஏனெனில், கிரிக்கெட் போட்டியின் போது அதிர்ஷ்டம், காலநிலை போன்றனவும் கூட முடிவுகளை மாற்றி விடக்கூடும். அதுமட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பல அணிகள் உள்ளன. இந்த அணிகள் அண்மைக்காலங்களில் வெளிப்படுத்திய திறமையை வைத்து மாத்திரம் அவற்றின் பலம், பலவீனத்தை அளப்பது பொருத்தமாக அமையாது. குறிப்பாக அணியில் பல காரணங்களினால் வீரர்கள் மாற்றப்படுவதுண்டு. இதனால், புதிய வீரர்களின் திறமையை அளந்து கொள்ள முடிந்தாலும் அவர்களின் போட்டியிடும் திறன் போராட்டத் திறன் ஆகியவற்றை அறிவதற்கு அவகாசம் தேவைப்படும். அந்தவகையில் தற்போது நடக்கவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் சில அணிகளில் புதிய வீரர்கள் உள்ளனர். சில அணிகளில் மூத்த வீரர்கள் உள்ளனர். இதில் மூத்த வீரர்களைப் பற்றி விமர்சகர்கள் ஏற்கனவே அறிந்துள்ளமையினால் அதனை அடியொட்டியே அவர்களது அணிகளுக்கு கூடிய புள்ளிகளை வழங்கி வெற்றி அணியாக பலம் மிக்க அணியாக அவர்களது அணியை விமர்சகர்கள் அடையாளப்படுத்துகின்றனர்.



ஆனால், புதிய வீரர்களைக்கொண்ட அணிகள் அப்படி அல்ல; அந்தப் புதிய வீரர்கள் திறமையானவர்களாகவும் இருக்கக் கூடும், திறமை இல்லாதவர்களாகவும் இருக்கக் கூடும். எனவே, புதியவர்கள் என்ற வகையில் அவர்கள் தான் சில சந்தர்ப்பங்களில் போட்டிகளின் முடிவை மாற்றுகிறவர்களாகவும் இருப்பதுண்டு. எதிரணியினருக்கும் கூட இவர்களைப் பற்றிய போதிய கணிப்பீடு இல்லாதிருக்கின்ற நிலையில் போட்டியில் எதிர்பாராத திருப்பங்களை இவர்கள் நிகழ்த்தக்கூடும்.

எனவே இவற்றை வைத்துப் பார்க்கும்போது, ரசிகர்கள் சாதாரண விமர்சனங்களை மனதிற்குள் உள்வாங்கி பெருத்த எதிர்பார்ப்புக்களை வைத்து ஏமாற்றத்திற்குள்ளாவதை விட, இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளின் முதல் சுற்றுப் போட்டிகளின் பின்னர் ஓர் ஆய்விற்குட்பட்டு சிறந்த அணிகள் எவை என்றவோர் தீர்மானத்திற்கு வரலாம்.

எனவே, எந்த அணி செம்பியன் கிண்ணத்தைக், கைப்பற்ற வேண்டும். என்ற நமது ஆசையை நாம் கூறலாம். ஆனால், எந்த அணி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றும், என்பதை தீர்மானிப்பது இறுதிப்போட்டியின் இறுதிப் பந்துதான்.

ரிஷபன்



## பாதகமான அம்சம்...

இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் சில போட்டிகள் இலங்கையில் நடைபெறுகின்ற போதிலும் தாய்நாட்டில் நடத்தப்படும் போட்டிகளில் கிடைக்கக்கூடிய சிறப்புப் பயன்களை அடைவதை (Home Advantage) இலங்கை அணி இழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

அதாவது, உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்துவதற்கு இலங்கையில் உருவாக்கப்பட்ட இரண்டு புதிய மைதானங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த மைதானங்களில் இலங்கை அணியினர் இதுவரை எந்தவொரு போட்டியிலும் கலந்து கொண்டதில்லை. எனவே, குறித்த



மைதானங்கள் பற்றிய எவ்வித மதிப்பீட்டையும் இலங்கை அணியினர் கொண்டிருக்காதது பாதகமான ஓர்அம்சமாகவே கருதப்படுகின்றது.

இலங்கை அணியின் தலைவர் சங்கக்கார வழங்கியிருந்த பேட்டிகளில் கூட இதனை சூசகமாக தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் அணியின் தலைவராக அஃப்ரீடி

உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியின் தலைவர் யார்?என்ற கேள்விக்கான விடை கிடைத்தாகிவிட்டது. அஃப்ரிடியை பாகிஸ்தான் அணியின் தலைவராக நியமிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஏனைய அணிகள் தமது அணியின் தலைவர் யார் என்று அறிவித்திருந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மட்டுமே தமது அணியின் தலைவர் யார் என்பதைத் தீர்மானிக்காமல் இருந்தது. இதனையிட்டு பலவிதமான விமர்சனங்களும் எழுந்தன.




சில உள்ளக முரண்பாடுகளின் காரணத்தினாலேயே, அணியின் தலைவர் தெரிவு இடம்பெறாமல் இருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அஃப்ரிடியை தலைவராகத் தெரிவு செய்வதற்கு விருப்பமில்லாத ஒரு பிரிவினரும் உள்ளனராம், எனினும், உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான நாள் அருகாமையில் இருப்பதனால் மாற்று வழியின்றியே அவரை தலைவராகத் தெரிவு செய்வதற்கு இணக்கம் காணப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## 'பாட்டா' வினா - 5 வெற்றி பெற்றவர்கள்...

Bata விஜய் B.first SCHOOL SHOES

- லோ.திலீப்குமார், 40/5, முகாந்திரம் வீதி, கொழும்பு-03.
- நேசன் நர்மதா, 138, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
- ஆர்.அஜித்குமார், 05, கோமஸ் வத்தை, ஜயரத்ன வீதி, நீர்கொழும்பு.
- ஐ.லஜித்தாஷினி, 251, கென்கடகொல்ல வீதி, மாத்தளை.
- ஆர்.எம்.முஷ்ரிஃப், 180/4, ஹிஜ்ரா மாவத்தை, மல்லவபிட்டிய, குருணாகல்.
- எம்.அம்ஜத், 09, பெரக் ஒழுங்கை, கொழும்பு-02.
- எஃப்.மிஸ்தா, 10/15, அஷோக்கராம வீதி, முக்தார் மன்ஸில், யோனக்கபுர, திக்வெல்ல.
- எஃப்.பாயிஸ் மொஹம்மத், 18, பாக்கிர் மாக்கார் வீதி, மருதானை, பேருவளை.
- என்.டி.நதா, 6B, மஸ்ஜித் மாவத்தை, கல்எலிய.
- ஃபாத்திமா மிஃப்ரா, 262/B, எகட உயன, முகத்துவாரம், மொரட்டுவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரிமச் செறிவுகூடிய கோள்

பெருமளவு கரிமம் செறிந்துள்ள கோள் ஒன்றை அமெரிக்க-பிரித்தானிய அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

''வைரங்களைக்கொண்ட மலைகளும் நிலப்பகுதிகளும் அங்கு காணப்படலாம்'' என இந்த ஆய்வுக்குத் தலைமை வகித்த பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் வானியற்பியல் ஆய்வாளர் நிக்கு மதுசுதன் தெரிவித்துள்ளார். WASP-12b எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தக் கோள், தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கோள்களில் அதிகமான கரிமத்தைக் கொண்டிருக்கும் முதலாவது கோள் எனக் கூறப்படுகிறது. இது வியாழன் கோளைப் போன்று வாயுக்களைப் பெருமளவு கொண்டுள்ளது.





அத்துடன், ஒக்சிஜன் வாயுவை விட ஐதரசன் வாயுவை இது அதிகம் கொண்டுள்ளது.

இக்கோலானது 1,200 ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ளது. 2,300° செல்சியஸ் அளவிற்கு வெப்பம் கொண்டதாக இருக்கும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. நாஸாவின் 'ஸ்பிட்சர்' விண் தொலைநோக்கி மூலம், குறித்த கிரகத்தில் இருந்து வெளிவரும் வெப்பக் கதிர்வீச்சு ஆராயப்பட்டுள்ளது. இத்தரவு களைக்கொண்டு இக்கோளின் பொதிவை ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

முதன்முதலில் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இக்கோள் அவதானிக்கப்பட்டது. அது குறித்த ஆய்வுகளையும் நாஸா விண்வெளி ஆய்வு மையம் தற்போது ஆராய்ந்து வருகிறது. இக் கோளை அதன் தாய்ச் சூரியன் WASP- 12 படிப்படியாக விழுங்கி வருவதாகவும், இதன் ஆயுள்காலம் இன்னும் 10 மில்லியன் ஆண்டுகள் வரை இருக்கும் எனவும் நாஸா கூறியுள்ளது.

# பூமிக்கு அருகில் 134 விண்கற்கள்


பூமிக்கு அருகில் 134 விண்கற்கள் இருப்பதை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாஸா கண்டுபிடித்



துள்ளது. இவை தவிர; 20 வால்வெள்ளிகள், 33 ஆயிரம் சிறிய கிரகங்கள் மற்றும் விண்கற்களும் இதன்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சூரியக் குடும்பத்தின் அங்கத்தவர்களான புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் உள்ளிட்ட கிரகங்களைச் சுற்றி வருகின்ற விண்கற்கள், சிறிய கிரகங்கள், வால் வெள்ளிகள் ஆகியவை பற்றி ஆராய்ச்சி செய்யும் நோக்கில் 'நியோவைஸ்' என்ற ஆய்வுத் திட்டத்தை கடந்த 2009ஆம் ஆண்டு டிசம்பரில் நாஸா ஆரம்பித்திருந்தது.

அதன்படி, 'நியோவைஸ்' ஆய்வுத் திட்டத்தின்மூலமே இந்த வான் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் இவை கண்டறியப் பட்டிருக்கவில்லை. இவை செவ்வாய்க் கிரகத்திற்கும், வியாழக் கிரகத்திற்கு இடைப்பட்ட பகுதியிலேயே கண்டறியப்பட்டுள்ளன என நாஸா அதிகாரியான லிண்ட்லே ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

தற்போது, சூரியனை பூமி சுற்றி வரும் பாதையில் இருந்து 4.5 கோடி கி.மீ. தொலைவுக்குள் 134 விண்கற்கள், கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றினால் பூமிக்கு ஏதும் ஆபத்துக்கள் உண்டா? என்று கருதி, நடத்தப்பட்ட ஆய்வினை அடுத்து, இவற்றால் பூமிக்கு எவ்வித ஆபத்துமில்லை எனத் தெரியவந்துள்ளது. அத்துடன், இவற்றின் அடர்த்தி, அளவு ஆகியவற்றைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன என்று ஜோன்ஸன் மேலும் தெரிவித்துள்ளார்.



# மிக வெப்பமான கிரகம்


இங்கிலாந்தின் ஸ்டெஃபோர்ட்ஷயரில் உள்ள கீலே பல்கலைக்கழக பேராசிரியர் அலெக்சிஸ் ஸ்மித் தலைமையிலான குழுவினர் அண்மையில் 3,200° செல்சியஸ் வெப்பம் கொளுத்தும் கிரகம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். விண்வெளியிலுள்ள வெப்பமான கிரகமாக இது




கருதப்படுகிறது. இந்தக் கிரகம், WASP 33b அல்லது HD 15082 என்று அழைக்கப்படுகின்றது.

கடந்த 2006 ஆம் ஆண்டிலேயே இந்தக் கிரகம் கண்டுபிடிக்கப்பட்ட போதும், கேனரி தீவிலிருந்து 'வில்லியம் ஹெர்ஸ்செல், தொலைக் காட்டி மூலம் தொடர்ந்து அது கண்காணிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், இதன் வெப்பநிலை தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து, விண்வெளியிலுள்ள மிக வெப்பமான கிரகமாக இது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கிரகம் வியாழக் கிரகத்தை விட நான்கரை மடங்கு பெரியது என்றும் 380 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது என்றும் கூறப்படுகின்றது. இந்தக் கிரகம் தன்னைத்தானே சுற்றிவர 29.5 மணி நேரம் எடுக்கின்றதாம்!

# பழமையான விண்மீன்திரள் கண்டுபிடிப்பு



இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றில் மிகப் பழமையானதெனக் கருதப்படும் விண்மீன் திரள் (பால்வீதி-Galaxy) ஒன்றை 'ஹபிள்' விண்வெளித் தொலைநோக்கி கண்டுபிடித்துள்ளது.

இந்த விண்மீன் திரள் 13 பில்லியன் ஆண்டுகள் பழமையானது என்று வானியலாளர்கள் கணித்திருக்கின்றனர்.

நாஸாவின் 'ஹபிள்' தொலைநோக்கியில் அண்மையில் பொருத்தப்பட்ட அகண்ட புகைப்படக் கருவி மூலமே இது படம் பிடிக்கப்பட்டுள்ளது. இந்த விண்மீன் திரளுக்கு UDFj-39546284 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் மிகச் சிறிய காலப்பகுதியில் இத்தகைய பேரடைகளின் (விண்மீன்திரள்கள்) எண்ணிக்கை வளர்ந்து வந்துள்ளமை இதன்மூலம் அறியப்பட்டுள்ளது. பெரு வெடிப்பு Big-Bang இற்குப் பின்னர் 500 மில்லியன் ஆண்டுகள் வரை ஒரு பேரடையே இருந்துள்ளது. அதற்குப் பின்னர் 150 மில்லியன் ஆண்டுகளில் 10 பேரடைகள் உருவாகியுள்ளன. அந்த எண்ணிக்கை 100 மில்லியன் ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரியான பன்மைச் சொல்லில் கோடிடுக — 5

1) முள் - (முள்கள்/ முட்கள்/ முற்கள்)
2) கல் - (கற்கள்/ கல்லுகள்/ கல்கள்)
3) தேனீ - (தேனீக்கள்/ தேனீகள்/ தேனிக்கள்)
4) சொல் - (சொல்கள்/ சொற்க்கள்/ சொற்கள்)
5) மரம் - (மரம்கள்/ மரன்கள்/ மரங்கள்)

## விஜய் வாசகர் மடல்




வாரம் ஒருமுறை வளமான ஆக்கங்களைத் தாங்கி வந்து அனைவர் உள்ளங்களையும் கொள்ளை கொள்கின்றாய். 'இராமாயணம்', 'தெரிந்துகொள்வோம்' போன்றவை என்னைக் கவர்ந்தவை.

**ரிஹாம் தாஸிம்,**
**மிரிஹம்பிடிய மு.வித்., ஈதனவத்த.**

'இலங்கையின் சுதந்திர தினம்', 'முத்திரை வரை சென்ற நம் பண்டைய மரபுரிமைகள்', 'திமிலுடைய டைனோசர்' போன்ற ஆக்கங்கள் சிறப்பாக இருந்தன. உன்னால் நான் பொது அறிவு நிறைந்த மாணவனாக மிளிர்கின்றேன். 'விஜய்' பத்திரிகையை வாசிப்பதன் மூலம் உலகை சுற்றி வருவது போன்ற உணர்வினைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

**ஆ.கஜந்தன்,**
**சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.**

விஜய்யே! உன்னால் நான் அதிகமான பயன்களைப் பெற்றேன். 'திமில்கொண்ட டைனோசர்', 'தெரிந்து கொள்வோம்' ஆகியவை மிகவும் சுவாரஸ்யமானவை. பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி, அனைவரும் உன்னால் எல்லையற்ற அறிவினைப் பெறுகின்றனர் என்பது எனது தாழ்மையான கருத்து.

**ம.கோமதி, சுவர்ணா வீதி,**
**வெள்ளவத்தை.**

'சுதந்திரப் பயணத்தின் முக்கிய தடங்கள்' எனும் கட்டுரை, சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரையான முக்கிய நிகழ்வுகளை சுருக்கமாக வழங்கியிருந்தது. 'பிரபஞ்சத்தின் மர்மங்களை ஆராய்ந்தவரின் மரணம்', 'நிறுத்தற் குறியீடுகள்', 'மருத்துவமனைக்குச் செல்லும் முன்னரான உதவிகள்', 'வேட்டை நாயை எதிர்த்த முயல்' போன்றவற்றினூடாக பல்துறை அறிவினைப் பெற்றேன்.

**ஏ.எம்.முஸம்மில்,**
**கமன்தெனிய வீதி, கிருங்கதெனிய.**

எகிப்து, சூடான், டியுனீஷியா, யெமன் போன்ற நாடுகளில் இன்றளவில் நிலவும் அரசியல் நிலைவரங்கள் குறித்து அறியக்கிடைக்கும்போது, அந்த நாடுகள் பற்றி 'விஜய்'யில் 'வாரம் ஒரு நாடு' பகுதியில் பிரசுரமான மேலதிக தகவல்களையும்



மீட்டிப் பார்க்கின்றேன்.

**உஸ்மான் மஸாஹிம், மன்னார் வீதி, புத்தளம்.**

உன்னில் பிரசுரமாகியிருந்த கணினி தொடர்பான இறுதிப்பக்கத் தகவல்கள் சுவாரஸ்யம் கலந்ததாகவும் அதிக பயனை அள்ளித் தரக்கூடியதாகவும் இருந்தன. இது போன்ற தகவல்களைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன்.

**எஸ்.நிருஷன்,**
**குருநகர்,யாழ்ப்பாணம்.**

'பழைமைமிகு தூய மலர் தாமரை', 'வேட்டை நாயை எதிர்த்த முயல்', 'இராமாயணம்', 'திமில் கொண்ட டைனோசர்' போன்றவற்றை விரும்பி வாசித்தேன்.

**பிரியா சிவரூபன்,**
**பலபொக்குன வீதி,**
**கிருலப்பனை.**

நான் 'விஜய்' பத்திரிகையின் ஆரம்பகால வாசகி. கடந்த 2009 ஆம் ஆண்டில் நான் உன்னில் சில பிரதிகளை வாங்கத் தவறிவிட்டேன். அதனையிட்டு மனம் வருந்திய எனக்கு, கடந்த மாதம் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியது. அன்று அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன். ஒல்லாந்தர் முதல் இராமாயணம் வரை உன்னில் பிரசுரமாகியிருந்த அனைத்தும் சுப்பர்.

**ஷாஃபிரா மொஹமட்,**
**கல்லோவிட்ட,**
**கன்னத்தோட்டை.**

இந்த இதழில் (16.02.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 23.02.2011.


**அனுப்ப வேண்டிய முகவரி:**



வாசகர் மடல்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.



## இடைவெளிகளை நிரப்புங்கள் — 3





## ஆங்கிலப் பதம் தருக — 4

1) கோதுமை -..............................
2) பாகற்காய் -..............................
3) பலா மரம் -..............................
4) உடும்பு -..............................
5) நண்டு -..............................
6) மிளகு -..............................

## 2

A,B,C,D,E எனக் குறிக்கப்பட்டுள்ளவற்றை ஒத்திருக்கும் உருக்களை இலக்கமிட்டுள்ள பகுதியிலிருந்து தெரிவு செய்து இணைக்க









அற்லஸ் அறிவுக்கு விருந்து 300
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## அறிவுக்கு விருந்து 297 விடைகள்

**போட்டி:1**



**போட்டி: 2**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | Q | X | N | O | P | E | T | V | I |
| B | K | R | P | E | K | O | K | G | T |
| M | C | P | C | D | L | O | Y | V | M |
| H | I | F | E | C | B | K | A | T | D |
| H | Z | L | A | O | E | G | L | L | J |
| F | Z | Y | N | W | C | H | Y | D | A |
| H | R | B | U | L | K | U | V | P | O |
| V | E | O | K | I | W | C | L | A | N |
| O | O | V | G | H | A | X | Q | B | I |
| O | X | A | F | E | T | X | Y | Z | D |

**போட்டி: 3**




**போட்டி: 4**

1) நாளாந்தம் - daily
2) தரம் - grade
3) தெற்கு - south
4) மக்கள் - people
5) கடிகாரம் - clock

**போட்டி: 5**

1) திராட்சை - குலை
2) கல் - குவியல்
3) மலை - தொடர்
4) சாவி - கொத்து
5) வீரர்கள் - படை

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 297 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
பாத்திமா புவாட், 26, வத்தேகம வீதி, மடவளை பஸார்.

**போட்டி: 02**
எம்.சேபான், எல்.சி.58, விமானநிலைய வீதி, அநுராதபுரம்.

**போட்டி: 03**
ஈ.சுகதீபன், 18/1A, வித்தியாலய ஒழுங்கை, திருகோணமலை.

**போட்டி: 04**
ரினூஸ் சூடின், 81, வில்மட் வீதி, ஹம்பாந்தோட்டை.

**போட்டி: 05**
மோ.அனுசி, 475, பிரதான வீதி, மாத்தளை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- உ.துளசிகா, கொக்குவில்.
- உ.தர்சனா, வட்டுக்கோட்டை.
- எஃப்.மின்ஹா, ஹிரிபிடிய.
- கி.கிருசாநுரேதன், செட்டிப்பாளையம்.
- எம்.பஸ்லான், மாராவ.
- எம்.மனாஸிர், சம்மாந்துறை.
- வி.சிவமலர், நுவரெலியா.
- எம்.அன்சிப், பொல்கஹவளை.
- எஃப்.ஆதிகா, மடவளை.
- எஃப். பிர்ஜா, மல்வானை.

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 1





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராதன ஆலயத்தைக் கைப்பற்ற இரு நாடுகள் யுத்தம்



புராதன காலத்து 'பிரிஹ்விஹியார்' இந்து ஆலயத்தைக் கைப்பற்றுவது தொடர்பாக தாய்லாந்து, கம்போடிய எல்லையில் இரு நாட்டு இராணுவ வீரர்களும் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் துப்பாக்கி மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருவதால் பொது மக்கள், இரு நாட்டு வீரர்கள் உட்பட, பலரும் பலியாகியுள்ளனர். எல்லைகளில் ஏற்பட்டுள்ள இந்தப் பதற்றம் காரணமாக, இரு நாடுகளையும் சேர்ந்த மக்கள் தம் இருப்பிடங்களைவிட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இரு நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள இந்த மோதல் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில் மோதலுக்குக் காரணமாக உள்ள இந்த ஆலயம் பற்றியும் சிறிது நோக்குவோம்.



தாய்லாந்து எல்லையில் கம்போடியாவின் மலை விளிம்புப் பகுதியில் 1,722 அடி உயரத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இது ஒரு சிவன் ஆலயமாகும். இந்த ஆலயத்தின் வரலாற்றை நோக்குகையில் இது 9 ஆம் நூற்றாண்டை நோக்கிச் செல்கின்றது. பாழடைந்த நிலையில் உள்ள இந்த ஆலயம் ஆதியில் நன்கு பராமரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த ஆலயம் (கி.பி. 889-910) முதலாம் யசோவர்மன் ஆட்சிக்காலத்தில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் சூரியவர்மன் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1112-1152) கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பிரசாத் பிரிஹ்விஹியார் என்னும் இந்த ஆலயத்தின் பெயரானது 'புனித மடாலயம்' என்றும் பொருள்படுகின்றது. நீண்ட காலமாக இந்த ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் காடுகளால் சூழப்பட்டு வெளியுலகுக்குத் தெரியாமல் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.



இந்த ஆலயம் கண்டுபிடிக்கப்பட்ட காலம் முதல் இதற்கு கம்போடிய தாய்லாந்து நாடுகள் உரிமை கோரி மோதல்களில் ஈடுபட்டு வந்துள்ளன. 1962 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்குமிடையிலான இப் பிரச்சினை உக்கிரம் அடைந்ததை அடுத்து சர்வதேச நீதிமன்றம் இதுபற்றி விசாரித்து இது கம்போடியாவுக்கே உரியதெனத் தீர்ப்பு வழங்கியது. இருப்பினும் இரு நாடுகளுக்குமிடையிலும் பனிப்போர் நிகழ்ந்து வந்து தற்போது அது மீண்டும் நேரடிமோதலாக உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள இந்த மோதலுக்கு இரு பகுதியினரும் வழமை போன்று ஒருவரையொருவர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

# இரத்தப்போக்கை கட்டுப்படுத்தும் புதியவகை 'பென்டேஜ்'



விபத்துக்கள் மற்றும் யுத்தகளங்களில் காயமடைபவர்களுக்கு இரத்தப்போக்கை கட்டுப்படுத்தும் புதியவகை இரசாயன பென்டேஜ் ஒன்றை "எடின்பர்க்" பல்கலைக் கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் புதியவகை பென்டேஜ் காயங்களிலிருந்து வெளியேறும் இரத்தத்தை உறையச் செய்து இரத்தப்போக்கு ஏற்படுவதைக் கட்டுப்படுத்துகிறது.

அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டு உயிரிழக்கும் அபாயம் ஏற்படும்போது, காயத்தின்மீது இந்த பென்டேஜை போடுகையில் வெளியேறும் இரத்தம் உடனடியாக உறைந்து இரத்தப்போக்கு ஏற்படுவது குறைவடைகின்றது.



இதன்மூலம் காயமடைந்தவர்கள் உரிய சிகிச்சை எடுத்துக்கொள்ளும் வரை அதிகளவில் இரத்தப்போக்கு ஏற்படுவது தடுக்கப்படுகிறது. யுத்தகளத்தில் காயமடையும் வீரர்களுக்கு இது மிகுந்த பயனளிப்பதாக இருக்கும்.


இந்த ஆய்வுக்குழு பேராசிரியர் மார்க் ப்ரேட்லி தலைமையில் இந்த புதிய இரசாயன பென்டேஜை கண்டுபிடித்துள்ளது.

ப்ரேட்லி மேலும் தெரிவிக்கையில் இந்த புதிய வகை 'பென்டேஜ்' விரைவில் சந்தைக்கு வரும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இந்த பென்டேஜ் நைலோனைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# புனித நகரம் அமிர்தசரஸ்



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அமிர்தசரஸ் நகரம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு விளங்குகிறது. சீக்கியர்களின் புனிதத் தலமான பொற்கோயில் இங்கு அமைந்துள்ளதால் இது சீக்கியரின் புனித நகரமாக விளங்கும் அதேவேளை, இந்து, பௌத்த வைணவர்களின் புனித நகரமாகவும் இது விளங்குகிறது. காரணம் இராமாயணத்தை தொகுத்து எழுதிய வால்மீகி முனிவரின் ஆசிரமம் இங்கிருந்ததாகவும் அவர் இராமாயணத்தை இங்கிருந்தே எழுதியதாகவும் நம்பப்படுகிறது. அதுமட்டுமல்ல; இராமபிரானால் கைவிடப்பட்டு வனவாசம் அனுபவித்த போது, சீதை வால்மீகி முனிவரின் இந்த ஆசிரமத்திலேயே வாழ்ந்ததாகவும் லவன், குசன் ஆகிய இருவரையும் இங்கேயே பெற்றதாகவும் நம்பப்படுகிறது. இதன் காரணமாகவே இந்து, பௌத்த, வைணவர்களுக்கும் இது புனித நகரமாகத் திகழ்கிறது. பொற்கோயில் இங்கு அமைந்துள்ளதாலேயோ என்னவோ இந்த நகரம் 'பொன்நகரம்' என்றும் செல்வந்த நகரம் என்றும் அழைக்கப்படுகின்றது.



இந்தநகரம் வருடாந்தம் சுமார் 64 லட்சம் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கின்றது. அமிர்தசரஸ் நகரம் மாநில தலைநகர் சண்டிகாருக்கு வடமேற்கே 210 கிலோமீற்றர் தூரத்திலும் பாகிஸ்தான் நகரான லாகூருக்கு கிழக்கே 32 கிலோமீற்றர் தூரத்திலும் இந்தியாவின் மேற்கு எல்லைக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இந்த நகரம் 1574 ஆம் ஆண்டு சீக்கிய மதகுருவான குரு ராம்தாஸ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

அமிர்தசரஸில் உள்ள பொற்கோவிலே சீக்கியரின் மிகப் பெரிய புனித தலமாகக் கருதப்படுகிறது. சீக்கிய மதத்தின் பத்தாவது குருவும் சீக்கிய இலக்கியத்தில் மிகப் புனிதமானவர் எனக் கருதப்படுபவருமான, சீக்கிய நிரந்தர குரு சாஹிப் எப்பொழுதும் இந்தக் கோவிலில் இருப்பதாக நம்பப்படுவதாலேயே இது சீக்கியரின் மிகப் பெரும் புனிதத் தலமாகக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்.






# வருடத்தின் சிறந்த உதாரண புருஷராக 'ஃபேஸ்புக்' கண்டுபிடிப்பாளர் தெரிவு

'ஃபேஸ்புக்' சேவையை உருவாக்கிய 26 வயதுடைய 'மார்க் ஷுக்கர் பேர்க்' கடந்த 2010 ஆம் ஆண்டிற்கான வருடத்தின் சிறந்த முன்னுதாரண புருஷராக, உலகப் பிரபல்யம் பெற்ற 'டைம்' சஞ்சிகை அறிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டில் 19 வயதாக இருந்த மார்க் ஷுக்கர் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலேயே 'ஃபேஸ்புக்' சேவையை அறிமுகப் படுத்தியிருந்தார். தற்போது ஏழு வருடங்களைக் கடந் துள்ள நிலையில் உலகம் பூராகவும் உள்ள மக்களில் 55 கோடிக்கும் அதிகமா னோர் தினமும் 'ஃபேஸ்புக்கின் பயனை அடையும் வகையில் முக்கி யத்துவம் அதிகரித்துள்ளது. அதுமட் டுமன்றி தினமும் 7 லட்சம் பேர் அளவில் புதிதாக 'ஃபேஸ் புக்'கில் இணைகின்றமையும் குறிப்பிடத்தக் கது. இந்த வேகத்தின்படி கணிக்கை யில் 2012 ஆம் ஆண்டை அடைகை யில் 'ஃபேஸ்புக்' பாவனையாளர் களின் எண்ணிக்கை 100 கோடியை எட்டிவிடும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

ஃபேஸ்புக் உலகம் பூராகவும் 75 மொழிகளில் சேவையாற்றி வருகின்றமையால் உலக அளவில் ஏராளமானோரை இந்தச் சேவை சுவீகரித்துள்ளது. அதிகூடிய சனத்தொகை உள்ள நாடுகளான சீனா, இந்தியா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியான நாடு எதுவென்றால் அது 'ஃபேஸ்புக்' நாடு என்று கூறுமளவிற்கு அதன் வளர்ச்சி வியாபித்துள்ளது.

எனவே, இத்தகைய சிறப்புமிகு சேவையொன்றை அறிமுகப்படுத்திய மார்க் ஷுக்கர் வருடத்தின் சிறந்த முன்னுதாரண புருஷராகத் தெரிவு செய்யப்பட்டமை நியாயமானதென்றே கருதப்படுகின்றது.

இத்தகைய் புகழினைத் தன்வசம் கொண்டுள்ள மார்க் ஹுக்கர் பேர்க் 'மெக்கின் டொஷ்' ரக கணினி உலகிற்கு அறிமுகமாகிய 1984 ஆம் ஆண்டில் தான் பிறந்துள்ளார். அவர் சிறு வயதிலிருந்தே கணினியைப் பயன்படுத்துவதில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டிருந் தார், தமது 12 ஆவது வயதில் வின்டோஸ் 3.1 நடத்துகை கொண்ட கணினியைப் பயன்படுத்தி தமது இல்லத்தில் இருந்தபடியே கணினி வலயமைப்பொன்றை அவர் ஏற்படுத்தியதுடன், இதற்கு ஸக்நெட் (Zuk Net) எனும் பெயரையும் சூட்டினார்.

அவ்வாறு ஆரம்பித்த அவரது படைப்புகள்தான் இன்று 'ஃபேஸ்புக்' வரை வியாபித்துள்ளது. தற்போதும் கூட அவர் கணினி தொடர்பான புதுப்புது ஆய்வுகளைச் செய்வதிலும், 'ஃபேஸ்புக்கிற்கு புரோகிராம்களை எழுதுவதிலுமே தமது நேரத்தை செலவிடுகின்றார்.

## பல வடிவங்களில் 'பயோ டேட்டா'க்கள்

தொழில் வாய்ப்புகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பப் பத்திரத்தை (பயோடேட்டா- கெரிக்குலம் விட்டா) புதிய வித்தியாசமான அமைப்புக்களில் அனுப்புவது புதிய வழிமுறையாகக் கையாளப்படுகின் றது. இவர்களுக்கென்றே, பல்வேறு வடிவிலான விண்ணப்பப்பத்திரங் களை வழங்குவதுதான் 'சிவி' இணைய சேவையாகும். இதில் காணப்படு கின்ற பல்வேறு வகையிலான 'டெம்ப்லேட்' பகுதிக்குச் சென்று தமது விபரங்களை உள்ளடக்கி விருப்பமான வடிவத்தில் விதவிதமான விண்ணப்பப்பத்திரங்களை அமைத்துக் கொள்ள முடியும். அவ்வாறே, விரும்பிய இடத்திற்கு அதனை ஈ-மெயில் செய்யவும் முடியும்.

முகவரி http://ceevee.com







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 16, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org